Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038 (சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 30 (19.06.2004) சனிக்கிழமை இதழ்:261

## இந்தியா செல்லும் வழியில்

# லண்டனில் பாலா, சந்திரிகாவை விதார் ஹெல்கிசன் சந்திப்பார்!



(லண்டன்)


இந்தியாவுக்கு இன்று விஜயம் செய்யவுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று இந்தியா வரும்வழியில் லண்டன் செல்லும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், அங்கு ஜனாதிபதியையும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்து - சமாதான முயற்சிகள் குறித்து பேச்சு நடத்தத் திட்டமிட்டிருப்பதாகத் கூறப்படுகிறது.

நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை நேற்றுமுன்தினம் சந்தித்திருந்தார்.

சமாதான முயற்சிகள் மற்றும் தற்போதையை இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து இந்தச் சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஐ.நா. உலக உணவுத்திட்ட தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் முரளீதரன், கலதாரி ஹோட்டலில் ஐ.நா. உலக உணவுத்திட்ட இலங்கைப் பிரதிநிதியுடன் செய்தியாளர் மாநாட்டில்...!

# நாட்டின் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஆலோசனை!

(கொழும்பு)

**நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் பாதுகாப்புச் சூழல் தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு சபையின் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் தலைமையில் நேற்று நண்பகல் ஆரம்பமான இந்தக் கூட்டம் நீண்ட நேரம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இராணுவத் தளபதியும், கூட்டுப் படைகளின் தளபதியுமான லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி ஜெட் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கொழும்பின் வர்த்தக மையங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கின்ற அதேவேளை, மட்டக்களப்பில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைகள் குறித்தும், இதனால் எழுந்துள்ள சூழ்நிலைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திகளை அரசஊடகம் வெளியிடுவது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படையினருடன் புலிகள் சந்திக்க ஏற்பாடு!

(அம்பாறை)

எதிர்வரும் 26 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் புலிகளுக்கும், விசேட அதிரடிப் படையினருக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைபற்றிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் காலை பத்து மணியளவில் இந்தச் சந்திப்பு நடைபெற ஏற்பாடகியுள்ளது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கலந்துகொள்ளவுள்ளார். விசேட அதிரடிப்படை தரப்பில் அதிகாரி உபுல் செனவிரத்தின உட்பட மாவட்ட முகாம்களின் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு விடுதிகளில் பொலிஸார் சோதனை!

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நேற்று நடைபெற்ற

# ஆசியக் கடற்பகுதியின் பாதுகாப்பு 16 நாடுகளின் கூட்டத்தில் இணக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நேற்று நடைபெற்ற பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதை அடுத்து நேற்று மாலையே பொலிஸார் விடுதிகளைச் சுற்றிவளைத்து சோதனைகளை நடத்தி தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

கொழும்பு டாம் வீதிப் பகுதியில் அமைந்துள்ள விடுதிகளில் நேற்றுமாலை பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது பொலிஸார் விடுதிகளில் தங்கியிருந்தவர்களைப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர். விசாரணைகளின் பின்னர் அநேகமானோர் விடுதலை செய்யப்பட்டனர். கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையாகவே இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (01)

(கொழும்பு)

ஆசியப் பிராந்தியக் கடற்பகுதியில் தீவிரவாதத் தாக்குதல்களை முறியடிப்பதற்கும், தகவல்களைப் பறிமாறிக்கொள்வதற்கும் - இந்தப் பிராந்தியத்தில் உள்ள 16 நாடுகள் இணக்கம் கண்டிருக்கின்றன.

கடந்த இரண்டு நாட்களாக ஹொங்ஹொங்கில் உச்சிமாநாடு ஒன்றை நடத்தி, மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக இணக்கம் கண்டிருப்பதாக கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜப்பானிய அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் ஆசியப்பிராந்தியத்தின் பாகிஸ்தான் தவிர, பங்காளதேஷ், புருனே, கம்போடியா, சீனா - ஹொங்ஹொங், இந்தியா, இலங்கை, இந்தோனிஷியா, ஜப்பான், லாவோஸ், மலேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென்கொரியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய 16 நாடுகள் கலந்துகொண்டன.

இந்தப் 16 நாடுகளில் இருந்து 90 பிரதிநிதிகள், மாநாட்டில் கலந்துகொண்டனர். ஆசிய நாடுகளிலிருந்து இவ்வளவு பெருமளவில் கலந்துகொண்டது இதுவே முதற்தடவை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமாதானத்தை நிலைநிறுத்தவும், ஆசியாவைச் சுற்றியுள்ள கடற்பரப்பைப் பாதுகாப்பதற்கும் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தளபதி பலகல்லவுக்கு ஆறு மாதகால சேவை நீடிப்பு!

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவிக் காலம் மேலும் ஆறு மாதங்களால் நீடிக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாக, அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியான செய்திகள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

தனது 59 ஆவது வயதைப் பூர்த்தி செய்யும் இவர், மூன்று முறை சேவை நீடிப்புக்களைப் பெற்றிருந்தார்.

இம்மாதம் லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வு பெற்றதும், அடுத்த மாதம் முதலாம் திகதி புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட பெறுப்பேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இராணுவத் தலைமை அதிகாரியாகவும், கிழக்குப் பிராந்தியத்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் அவசியமற்றதொன்று!

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடத்தப்படும் மாகாண சபைத் தேர்தல் அநாவசியமானதொன்று என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளர் பத்திரிகையாளர் மாநாடொன்றை நேற்று ஏற்பாடு செய்தார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பண்ணைக் காவலிலிருந்த இருவர் படுகொலை

## மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர்பற்று வயல் பகுதியில் பண்ணைக் காவலில் ஈடுபட்டிருந்த இருவர் இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு - ஏறாவூர் நவுண்டனியமடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது 58 வயதான கந்தப்போடி மயில்வாகனம், 22 வயதான தேவமணி குட்டிகண்ணன் ஆகிய இருவருமே படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது -

மரக்கறிகள் உள்ள பண்ணை ஒன்றில் மேற்படி நபர்கள் இருவரும் பணியாற்றிக் கொண்டிருந்த சமயமே இனந்தெரியாத நபர்கள் சிலர் இவர்களைப் படுகொலை செய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு பீடிகளைக் கடத்த முயன்றவர்கள் இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்!

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு பீடிப்பொதிகளைக் கடத்த முயன்ற உள்ளூர் பொலிஸார் உட்பட 28 பேரை இந்தியக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். பீடிப்பொதிகளுடன் படகும் பறிமுதல் செய்யப்பட்டது.

இராமேஸ்வரம் கடற்கரையில் இருந்து சர்வ சாதாரணமாக பீடிப் பொதிகளும், மாத்திரைகள், துணிகள் மற்றும் இலங்கை அகதிகளையும் படகுமூலம் இலங்கைக்கு கொண்டு சென்று கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் உள்ளூர் கடத்தல்காரர்கள் இந்தியக் கடற்படைக்குத் தெரியாமல் சாமர்த்தியமாகச் செயற்பட்டு வந்தனர். இந்த நிலையில் கடந்த 4 நாட்களுக்கு முன்னர் இராமேஸ்வரம் தெற்கு வாசல் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ஆயிரக் கணக்கான மாத்திரைகள் கரையொதுங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப்பகுதியில் தீவிர கடல் ரோந்துப்பணியில கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கு அல்வா கொடுத்து விட்டு கண்ணாடியிழைப் படகில் அகதிகளையும், பீடிப்பொதிகளையும், துணிகளையும் உள்ளூர்க் கடத்தல் காரர்களின் உதவியுடன் ஏற்றிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த கடற்படையினர் கடத்தல்காரர்களையும், அகதிகளையும் துப்பாக்கி முனையில் சுற்றிவளைத்துப் பிடித்தனர். எனினும் கடத்தல்காரர்களில் நான்கு பேர் தப்பியோடிவிட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டனர். இதில், 17 குடும்பத்தைச் சேர்ந்த 14 ஆண்களும், 7 பெண்களும், 6 குழந்தைகளுமாக மொத்தம் 27 பேரும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அகதிகளாக சேலம் அகதிமுகாமில் தங்கியிருந்தவர்களாவார்.

# நீதிமன்றச் செய்திகள்

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய 9 பேருக்கு தலா 10 ஆயிரம் அபராதம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் களவாடியமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்றமை ஆகிய குற்றங்களுக்காக 90 ஆயிரம் ரூபாவை யாழ்.நீதிமன்றம் குற்றப்பணமாக அறவிட உத்தரவிட்டுள்ளது.

அரியாலை மற்றும் ஆனைக் கோட்டை ஆகிய இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஒன்பது பேர் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட வேளையிலேயே, நீதிமன்றம் ஒவ்வொருவரிடமும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 90 ஆயிரம் ரூபாவை குற்றப்பணமாக அறவிட்டது.

## சட்டவிரோதமாக சாராயம் விற்றோருக்கு அபராதம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் அரசாங்க அனுமதிப் பத்திரம் இன்றி சாராயம் விற்ற ஆறு நபர்களை 47 ஆயிரம் ரூபா குற்றப் பணத்தினைச் செலுத்துமாறு, யாழ். மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

குருநகர், யாழ்.நகர், கொட்டடி, கந்தர்மடம் ஆகிய பிரதேசங்களில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக சாராயம் விற்றவர்களுக்கே யாழ்.மாவட்ட நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் குற்றப் பணமாகவும், தர்மப்பணமாகவும் மேற்படி தொகையினைச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

இதேசமயம், சட்டவிரோதமாக வடிசாராயத்தை தனது உடைமையில் வைத்திருந்தார் எனக்குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையை யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் வழங்கினார்.

## திருட்டில் ஈடுபட்ட இரு நபர்களுக்கு 6 மாத காலச் சிறைத் தண்டனை!

திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் இரு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால சிறைத் தண்டனையை வழங்கியது.

இரவு நேரத்தில் வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினால் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு இரண்டு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால சிறைத்தண்டனையை யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் வழங்கினார்.

மேலும், 3 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கோப்பாய் பொலிஸாரால் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பெண் ஒருவருக்கும் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால கடூழியச் சிறைத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா இன்று

யாழ்.கந்தர்மடம் பழம் வீதி சிறிசித்திவிநாயகர் ஆலயத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஆலயத் திருக்கல்யாண மண்டபத்தில் நிர்வாக சபைத் தலைவர் லயன் கங்கைவேணியன் தலைமையில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்கு வாழ்த்துரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். ஆலயப் பிரதம குரு உ.கிருபானந்தக் குருக்கள் ஆசியுரையை வழங்கவுள்ளார். இதனைத்தொடர்ந்து வில்லுப் பாட்டு, பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன இந்நிகழ்வில், ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

## கண்ணிவெடி அபாய விழிப்புணர்வு வார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தும் கண்ணிவெடி இடர் அபாயக்கல்வி விழிப்புணர்வு வார நிகழ்வுகள் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சிறுவர் நாடகப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு இடையேயான சிறுவர் நாடக அரங்கப்போட்டிகள், இன்று பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மருதங்கேணிக் கோட்டம், பருத்தித்துறைக் கோட்டம், கரவெட்டிக்கோட்டம் ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகள் வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. (122)

## சமகால அரசியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 10 ஆவது தொடர் நாளை பி.ப 3.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கில் 'தமிழர் பண்பாட்டின் இன்றை செல்நெறி' எனும் தலைப்பில் கலாநிதி மனோன மணி சண்முகதாஸ் கருத்துரை வழங்குவார்.

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

தியாகிகள் தினத்தை முன்னிட்டு இன்று காலை 10 மணிக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் கட்சித்தொண்டர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

### வலி-தென்மேற்குப் பிரதேசசபை ஏற்பாட்டில்

# சூழல் அபிவிருத்தி குறித்து இன்று விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்குப் பிரதேச சபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சூழல் அபிவிருத்தி சம்பந்மான விழிப்புணர்வுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் தலைமையில் இடம் பெறும்.

இன்றைய நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, யாழ்.மாவட்ட மத்திய சூழல் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி வ.குமுதினி, சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி சம்பந்தமான விரிவுரையை ஆற்றவுள்ளனர்.

இதில் திண்மக்கழிவு, முகாமைத்துவம், கட்டாக்காலி நாய்கள், மரம் நடுகை, உணவு கையாளும் நிறுவனம், கால்வாய்கள், அரிசி ஆலைகள், ஆலைகளின் இரைச்சல், நகரசபையாக்கம், டெங்குநோய ஒழிப்பு சம்பந்தமாகப் பேசப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சனசமூக நிலையங்களும், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சுகாதார பரிசோதகர்கள், உணவு கையாளும் நிறுவன உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கொக்குவில் இளம் பெண்ணை இரு நாட்களாகக் காணவில்லை!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

கொக்குவில் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவரைக் கடந்த இரண்டு தினங்களாகக் காணவில்லை என யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் மேற்கு, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 25 வயதான துரைராசா சுதாஜினி என்பவரையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த 10 ஆம் திகதி தனது வீட்டில் மேற்படி பெண் இருந்ததாகவும், இவரை ஓட்டோவில் வந்த சில நபர்கள் ஏற்றிச் சென்றதாகவும், அப்போது அந்தப்பெண் கூக்குரலிட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்த சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்தார்.

# நியாப் புனரமைத்த நான்கு குளங்கள் கமக்காரர் அமைப்பிடம் ஒப்படைப்பு!

நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட நான்கு குளங்களை நாளை மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் கமக்காரர் அமைப்புக்களிடம் ஒப்படைக்கவுள்ளது.

வடமராட்சியில் உள்ள நான்கு குளங்களே இவ்வாறு கமக்காரர் அமைப்புக்களிடம் விவசாய மற்றும் பாவனைகளுக்காக விடப்படவுள்ளன.

இமையாணன் மேற்கு துவாளி குளம், மத்தொனி தாழங்குழிக்குளம், துன்னாலை மேற்கு வேரக்கழிக் குளம், குடத்தனை அளம்பைக்குளம் ஆகிய நான்கு குளங்களே பொது மக்களின் பாவனைக்காக விடப்படவுள்ளன.

இந்தக் குளங்களைப் பார்வையிடுவதற்காகவே யாழ்.செயலகத்தைச் சேர்ந்த குழுவொன்று வடமராட்சிப் பிரதேசத்துக்குச் செல்லவிருந்தது. எனினும், அக்குளங்கள் சிறப்பாகப் புனரமைக்கப்பட்டுள்ளமையை நியாப் ஆய்வுக்குழு உறுதிப்படுத்தியுள்ளமையை அடுத்தே, இந்தக் குளங்களைப் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளன.

யாழ்.செயலகத்தைச் சேர்ந்த மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நியாப்திட்ட அதிகாரிகளும் இந்தக் குளங்களை ஒப்படைக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (ப)

### யாழ்.பல்கலைக்கழக

# தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அடையாள வேலை நிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை விரைவாக சுமுகமான முடிவுக்குக் கொண்டுவர நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நாளை மறுதினம் யாழ்.பல்கலைக் கழக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடையாள வேலை நிறுத்தப்போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக எழுதுவினைஞர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


**காஸ் குக்கர்கள்**
**றினை(Rinnai), நாஷனல் (National) விற்பனைக்கு உண்டு**

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய
(i) றினை (Rinnai-602E)
(ii) நாஷனல் (National GT 211 MA)
காஸ் குக்கர்கள் நியாய விலையில் விற்பனைக்கு உள்ளன.

*ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையும் (Gurantee with after sales service for one year) இலவசமாக செய்து தரப்படும்.
*இத்துடன் உங்களின் பாவனையில் உள்ள பழுதடைந்த எல்லா வகை காஸ்குக்கர்களும் திருத்தி வர்ணம் பூசி புது மெருகூட்டித் தரப்படும்.

தொலைபேசி:
222 6236
0777 170239
(சி/2673)

தொடர்புகளுக்கு
மு.கருணாநிதி
கனகசபாபதி ஒழுங்கை,
ஸ்ரேஷன் வீதி
கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்

**The Royal College of Jaffna**
ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கிறீர்கள். ஆனால், கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி.
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2399)

**திறைஞ்சனல்ஸ்** சங்கானை
விஜயகாந், தேவயாணி நடித்த
**வல்லரசு**
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பி.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45 (பி.நே) General daughter

**ராஜா** யாழ்ப்பாணம்.
விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த

**அருள்**
(சி-2623)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும் (பி.நே)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த

**கில்லி** (கில்லி)
(சி-2622)
22 வரை மட்டும்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியற்ற முறையை அரசு கடைப்பிடிக்குமானால் எமக்கான தீர்வைப் போரின் மூலம் பெறுவோம்!

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் தற்போது சர்வதேச பங்களிப்புக்கள் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் தொடர்ந்தும் இலங்கையின் அரசாங்கங்கள் நிச்சயமற்றதும், நீதியற்றதுமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாயின் எமக்கான தீர்வை போரின் மூலம் பெற்றுக்கொள்ளவும் எம்மால் முடியுமென்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தம்மைச் சந்தித்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் குழுவிடம் திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

சுவீடன் நாட்டின் 20 பல்கலைக்கழக மாணவர்கள், தென்னிலங்கை பெரும்பான்மையின மாணவர்கள் இருவர் மற்றும் பௌத்த பிக்கு ஒருவர் ஆகியோரைக் கொண்ட தூதுக் குழுவை திருகோணமலை கிறீன் வீதியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து சி.எழிலன் சந்தித்து தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து கலந்துரையாடினார்.

தூதுக்குழுவினருடன் தொடர்ந்தும் கலந்துரையாடிய சி. எழிலன், மாணவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தையும் அதன் தலைவியான ஜனாதிபதியையும் விட மிக மேலான முறையில் நாம் சமாதானம் குறித்த சரியான நிலைப்பாட்டில் இருக்கின்றோம். எனவே தொடர்ந்தும் சமாதானம் பேணப்படவேண்டும் என்பதில் நாம் மிக மிக உறுதியாக இருக்கின்றோம்.

சமாதானம் பேணப்படுமா இல்லையா என்பது குறித்து இன்று அநேகருக்கும் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனினும் அரசாங்கத்தின் அடுத்த கட்ட நகர்வைப் பொறுத்தே நிலைப்பாடுகள் தீர்மானிக்கப்படும். எனவே முடிவை மேற்கொள்ளும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்தின் பக்கமே உள்ளது.

போர் அற்ற அமைதிக்காலத்திலும் நாம் 33 போராளிகளை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இழந்துள்ளோம். அவ்வாறு இழப்புக்கள் ஏற்பட்டு விட்ட நிலையிலும் நாம் அமைதி காத்து சமாதானத்துக்காக உயிர் விலை கொடுத்துள்ளோம். எனவே நாம் சமாதானத்தின் பால் விருப்புக் கொண்டவர்கள் என்பது தெளிவு என்று குறிப்பிட்டார். (10)

## ஹெல உறுமய எம்.பிக்கள் மீதான தாக்குதலை கண்டித்து பொதுக்கூட்டங்கள்

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது கடந்த எட்டாம் திகதி நாடாளுமன்றத்தில் வைத்து நடாத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நாடு முழுவதிலும் பொதுக் கூட்டங்களை நடத்த பல பௌத்த அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

இந்தப் பொதுக்கூட்டங்களை மாகாணமட்டத்தில் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை, பௌத்த பிக்குகளை தாக்கியதைக் கண்டித்து கடந்த 11 ஆம் திகதி பொரளையில் மாபெரும் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

இவ்வாறு நடைபெறவுள்ள கண்டனப் பொதுக்கூட்டங்களில் ஹெல உறுமயவின் அதியுயர் பீடத்தின் பிக்குகளும் பங்குபற்றவுள்ளனர்.

## ஊடகத்துறை அமைச்சரின் கருத்துக்கு சுயாதீன ஊடக அமைப்பு கண்டனம்!

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்துக்கள் பொறுப்பற்ற முறையில் அமைந்துள்ளதாக சுயாதீன ஊடக அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தனது ஊடக அமைச்சு பதவியேற்றபின் பின்னர் இடம்பெற்ற அரச ஊடகங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது, ஊடக அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியே எமது பிரதான எதிரி, எனவே எதிர்காலத்தில் எமது பிரதான எதிரி யாரென்பதை இனங்கண்டு அவர்களை நாம் தாக்குவோம் எனவும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையோ, இலங்கை தொழிலாளர் காங்கிரசையோ, ஜாதிக ஹெல உறுமயவையோ இனிமேலும் தாக்கும் திட்டம் எமக்கில்லை என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய தவறுகளை பொதுமக்களிடம் எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச ஊடகங்களின் தலைவர்களை கேட்டுக்கொள்வதாக அரசஊடகங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

ஊடக அமைச்சரின் இந்த பொறுப்பற்ற கருத்துக்களையே சுதந்திர ஊடகஅமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மங்கள சமரவீரவின் இந்தக் கருத்து, தனது எதிர்க்கட்சிகளுக்கெதிரான பிரசாரம் செய்யும் தளமாக அரச ஊடகங்களை அரசாங்கம் கருதுகின்றமையையே வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ள சுயாதீன ஊடக அமைப்பு, இது ஊடகப் பாரம்பரியங்களுக்கும், ஜனநாயக நலன்களுக்கும் எதிரான அரசாங்கத்தின் மோசமான வன்செயலெனவும் தெரிவித்துள்ளது.

எனவே, அரச ஊடகங்களை ஜனநாயக மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் எடுக்க வேண்டுமெனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இடைக்கால நிர்வாகம் குறித்து தூதுவர்களுக்கு தெரியப்படுத்த திட்டம்

### ஜே.வி.பி வேலைத்திட்டம் ஆரம்பம்

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வடக்கு - கிழக்கு பகுதிகளில் செயற்படுத்தப்படுமானால், அது தமிழீழத்தை புலிகளுக்கு வழங்குவதாகி விடுமென குறிப்பிட்டு அது தொடர்பாக கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டு தூதுவர்களுக்கும் தெரியப்படுத்தும் வேலைத் திட்டங்களை ஜே.வி.பி ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பல அங்கத்தவர்கள் பல வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர். இதன் தொடர்ச்சியாக இந்த வார இறுதியில் சீனத் தூதுவரையும் சந்தித்து கலந்துரையாட ஜே.வி.பி முடிவுசெய்துள்ளது.

## அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்

(கொழும்பு)

அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு வழங்கப்படாமை, சம்பள முரண்பாடுகள், அஞ்சல் தொலைத் தொடர்புத்துறையில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படாமை ஆகியவற்றைக் கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் கல்முனை மாவட்டக் கிளைத் தலைவர் யு.எல்.எம். பைசார் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் தொடர்பாக இறுதி முடிவு எடுப்பதற்கான பொதுக் கூட்டம் ஒன்று அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத் தலைவர் எம்.ஏ.சாந்தகுமார தலைமையில் இடம்பெறவுள்ளது.

பெரும்பாலும் இம்மாதம் 29, 30 ஆம் திகதிகளில் இப்போராட்டம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(07,01)

## சிறையிலிருந்து விடுதலையானோருக்கு மன்னாரில் புனர்வாழ்வு முகாம்!

(மன்னார்)

மன்னாரில் போதைப்பொருள் பாவனை காரணமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீள விடுதலையாகி வரும் வேளை, அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகமாக புனர்வாழ்வு முகாமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த முகாம் மன்னாரிலுள்ள கீரிக்கும் - பட்டித் தோட்டத்திற்குமிடையில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு போதைப்பொருள் காரணமாக சிறையில் இருப்பவர்கள் மற்றும் விடுதலையானவர்களின் விபரங்களை திரட்டுமாறு மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் சகல பிரதேசங்களுக்கும் அறிவித்ததையடுத்து பிரதேச செயலர், கிராம அலுவலர்களிடம் விபரங்களைத் திரட்டித் தருமாறு பணித்துள்ளார்.

மன்னாரிலுள்ள உப்புக்குளம், பேசாலை, பள்ளிமுனை, தலைமன்னார் போன்ற பிரதேசங்களிலேயே போதைப்பொருள் பாவனை அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்குள் மட்டும் போதைப்பொருள் காரணமாக 30 பேர் பள்ளிமுனையில் கைது செய்யப்பட்டனர். பின்னர் 17 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக மன்னாருக்கு வருபவர்களும் போதைப் பொருள் கொண்டு வருவது அதிகரித்துள்ளதாகவும், இதனாலும் போதைப்பொருள் பாவனையாளர்களின் தொகை அதிகரித்திருக்கலாமெனவும் கூறப்படுகின்றது.



அண்மையில் தமிழகத்துக்குச் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.

## ஐ.நா சபையின் செயற்திட்டத் தூதுவராக முத்தையா முரளிதரன் தெரிவு



ஐக்கிய நாடுகள் சபையினது உலக உணவுத் திட்டத்தின் - பட்டினிக்கும், வறுமைக்கும் எதிரான செயற்திட்டத்திற்கான தூதுவராக உலகின் முதற்தர சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகூடுதலான விக்கெட்டுக்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ள முத்தையா முரளிதரன், ஐக்கிய நாடுகள் சபையினது உலக உணவுத் திட்டத்தின் பட்டினிக்கும், வறுமைக்கும் எதிரான செயற்திட்டங்கள் தொடர்பான தனது செயற்பாட்டை எதிர்வரும் வாரத்தில் ஆரம்பிப்பார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

நாளை கொழும்பில் இடம்பெற வுள்ள இந்தச் செயற்திட்டத்தின் முதலாவது நிகழ்வில் முரளிதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

அண்மையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகூடிய விக்கெட்டுக்களை கைப்பற்றி சாதனை படைத்த முத்தையா முரளிதரனது இச்செயற்பாடு அவரது புகழை மேலும் உயர்த்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினருக்கான வாக்காளர் அட்டைகளை விமானம் மூலம் அனுப்ப வசதி செய்யுங்கள்!

### பாதுகாப்பு செயலாளரிடம் தபால் மா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள படையினர் வாக்களிக்கும் வகையில், அவர்களுக்கான வாக்காளர் அட்டைகளை விமானம் மூலம் அனுப்புவதற்கு வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு தபால்மா அதிபர் கே.எ.எஸ்.சேனாதீர பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைக் கோரியுள்ளார்.

இதுவரை காலமும் படையினருக்கு அனுப்பப்படும் வாக்காளர் அட்டைகள் படைத் தலைமையகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சம்பந்தப்பட்ட முகாம்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

ஆனால் இவ்வாறு அனுப்பப்பட்ட வாக்காளர் அட்டைகள் சரியான முறையில் விநியோகிக்கப்படவில்லையென, கடந்த பொதுத் தேர்தலில் முறைப்பாடுகள் கிடைத்ததாக தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது வடக்கு - கிழக்கில் பணியாற்றும் படையினரில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லையென முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான நிலைமைகளை தவிர்க்கும் வகையில் தற்போது நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான படையினரின் வாக்காளர் அட்டைகள் அஞ்சல் திணைக்களத்தினூடாக அந்தந்த படைத் தலைமையகங்களுக்கு அனுப்ப விமான சேவை வசதியை பாதுகாப்பு அமைச்சின் செயலரிடம் தபால் மா அதிபர் கோரியுள்ளார்.

தபால் ஊழியர்கள் இருவருடன் உத்தியோகபூர்வ அஞ்சல் வாக்காளர் அட்டைகளை அனுப்புவதற்கே தபால் மா அதிபர் இந்த அனுமதியைக் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவிற்சர்லாந்து அணியை இங்கிலாந்து வீழ்த்தியது!



ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவு போட்டியில் ரூனி அடித்த இரண்டு கோல்களின் உதவியுடன் 3-0 என்ற அடிப்படையில் சுவிற்சர்லாந்து அணியை இங்கிலாந்து அணி வீழ்த்தியது.

வெற்றி பெற்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் களம் இறங்கிய இங்கிலாந்து அணி, மிகச் சிறப்பாக விளையாடி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதி வாய்ப்பை நோக்கி முன்னேறியது.

முதல் லீக் போட்டியில் பிரான்ஸ் அணியிடம் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி, போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடியுள்ளது. இங்கிலாந்து அணியின் சார்பாக வேய்ன் ரூனி 2 கோல்களையும், ஜெரார்ட் ஒரு கோலும் அடித்தனர். முதல் பாதியின் 23 ஆவது நிமிடத்திலும், இரண்டாவது பாதியில் 75 ஆவது நிமிடத்திலும் ரூனி கோலடித்தார். 82 ஆவது நிமிடத்தில் ஜெரார்ட் 3 ஆவது கோலை அடித்தார்.

இந்தப் போட்டியில் கோல் அடித்ததன் மூலம் இங்கிலாந்து வீரர் வேய்ன் ரூனி புதிய சாதனை படைத்தார். ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன் போட்டி வரலாற்றில் மிக இளம் வயதில் கோல் அடித்த வீரர் என்ற பெருமையை ரூனி பெற்றார். இந்தப் போட்டியில் முதல் கோல் அடித்தபோது ரூனிக்கு 18 வயது 237 நாட்களுமாகும்.

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐரோப்பிய உதைபந்து சம்பியன் போட்டியில், பிரான்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் யூக்கோஸ்சிலாவியாவை சேர்ந்த டிராகன் ஸ்டோஜ்கோவிச் என்னும் வீரர் 19 வயது 3 மாதங்களில் இருந்தபோது கோலடித்திருந்தது முந்தைய சாதனையாகும்.



இரண்டாவது பாதி ஆட்டத்தின் கடைசி கட்டத்தில்தான் இங்கிலாந்து அணியின் ஆட்டத்தில் சூடுபிடித்தது.

சுவிற்சர்லாந்து அணியின் தடுப்பு ஆட்டக்காரரான பிரண்ட் ஹாஸ் சிவப்பு அட்டை காட்டப்பட்டு நடுவரால் வெளியேற்றப்பட்ட பின்பு இங்கிலாந்து அணியின் ஆட்டத்தில் வேகம் அதிகரித்தது.

வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்ற நிலையில் களம் இறங்கிய இங்கிலாந்து அணி, முதல் பாதியில் குறிப்பிடும்படியாக ஆடவில்லை.

இருப்பினும் ரூனி அடித்த முதல் கோலால் இங்கிலாந்து முன்னிலை பெற்றது. 23 ஆவது நிமிடத்தில் பெக்காம் கொடுத்த பந்தை ஓவன் தனி நபராக இடப்புறமாகக் கடத்திச் சென்று தூக்கி அடித்தார் இதனை தலையால் முட்டி கோல் அடித்து ரூனி புதிய சாதனை படைத்தார்.

இதன் பின்பு நிதானமாக விளையாடத் தொடங்கியது இங்கிலாந்து அணி. இருப்பினும் ஓவன் அஸ்லே கோல் ஆகியோருக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தாலும் பலனளிக்கவில்லை. இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் தடுப்பு ஆட்டத்தை ஊடுருவ சுவிற்சர்லாந்து முன்கள வீரர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளை இங்கிலாந்து வீரர்கள் எளிதாக முறியடித்தனர்.

இந்த நிலையில் முதல் பாதி முடிவுக்கு வந்தது. அப்போது 1-0 என்ற முன்னிலையில் இங்கிலாந்து அணி இருந்தது.

இந்த நிலையில் 2 ஆவது பாதியின்போது சுவிற்சர்லாந்து வீரர் ஹாஸ் வெளியேற்றப்பட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இங்கிலாந்து அணி தாக்குதல் ஆட்டத்தை அதிகரித்தது. ரூனி, ஜெரார்ட், ஓவன் ஆகியோரின் அதிவேக ஆட்டத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி சுவிற்சர்லாந்து கோல் பகுதியை தொடர்ந்து தாக்கத் தொடங்கியது. இதற்கு பதிலடி கொடுக்க சுவிற்சர்லாந்து அணி வீரர்கள் முயன்றாலும் இங்கிலாந்து அணியின் வலிமையான தடுப்பாட்டம் சுவிற்சர்லாந்து அணியைத் தடுத்து நிறுத்தியது.



UEFA Euro 2004 PORTUGAL

இந்த நிலையில் ஆட்டத்தின் 75 நிமிடத்தில் மக்கேல் ஓவனுக்கு பதிலாக மாற்று வீரராக களம் இறங்கிய வாஸ்செல் - பாஸ் செய்த பந்தை ரூனி தடுத்து வலுவாக அடிக்க இதைச் சுவிற்சர்லாந்து கோல் கீப்பர் ஸ்டீல் தடுத்தும் அந்த பந்தானது கோல் வலைக்குள் புகுந்தது.

அடுத்தாக 82 ஆவது நிமிடத்தில் ஜெரார்ட் ஒரு கோல் அடித்தார். இத்துடன் போட்டி முடிவுக்குவர 3-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணி சுவிற்சர்லாந்தை வீழ்த்தியது.

இந்தப் போட்டியை காண சுமார் 30 ஆயிரம் ரசிகர்கள் அரங்கத்தில் கூடியிருந்தனர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் 'பி' பிரிவில் இங்கிலாந்து அணி 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ஏற்கனவே குரோஷிய அணியுடனான ஆட்டத்தில் சமநிலை பெற்றதால் சுவிற்சர்லாந்து அணி 1 புள்ளியை மட்டும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸை அதிர்ச்சிக்குள்ளாக்கிய குரோஷிய உதைபந்தாட்ட அணி!

'பி' பிரிவின் இன்னுமொரு ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு மோதிய பிரான்ஸ் அணியும் குரோஷிய அணியும் தலா இரண்டு கோல்களைப் போட்டதால் போட்டி சமநிலையில் முடிந்தது.

ஏற்கனவே முதலாவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்திய வலுவான பிரான்ஸ் அணி, குரோஷியாவை எளிதில் தோற்கடித்து காலிறுதிக்குள் நுழையும் கனவுடன் களம் புகுந்தது.

தற்போதைய சம்பியனான பிரான்ஸ் அணிக்கு குரோஷிய வீரர் மிலன் ரபேக் முதலாவது கோலை அடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

பின்னர் ஒரு சில நிமிடங்களுக்குள் டாடோ பிறகோ இன்னொரு கோலை அடித்து குரோசிய அணியை முன்னிலைக்குக் கொண்டு வந்தார்.



குரோஷிய வீரர்களின் ஆட்டத்தினால் திணறிப்போன பிரான்ஸ் வீரர்கள் சுதாகரித்துக்கொண்டு விளையாடினர்.

இதனையடுத்து பிரான்ஸ் அணி வீரர்கள் ரோபட் கோவும், ரியூட்டும் தலா ஒரு கோல் அடித்தனர்.

இதனால் 2-2 என்ற சமநிலையை இரு அணிகளும் அடைந்தன. ஆட்டத்தின் கடைசி நேரத்தில் குரோஷிய வீரர் இலிக்கா அடித்த பந்து கோல் பொயின்ரில் பட்டு நழுவிச் சென்றது.

இதனால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பை குரோஷிய அணி இழந்தது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளுமே தலா 2 கோல்களை அடித்திருந்ததால் போட்டி சமநிலையில் முடிவடைந்திருந்தது. இந்தப் போட்டியினை 3 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்டனர்.

இதனால் இரண்டு அணிகளுமே தலா ஒவ்வொரு புள்ளியைப் பெற்றுக் கொண்டன. 'பி' பிரிவில் சுவிற்சர்லாந்து ஒரு புள்ளியுடனும், இங்கிலாந்து 3 புள்ளிகளுடனும் குரோஷியா 2 புள்ளிகளுடனும் பிரான்ஸ் 4 புள்ளிகளுடனும் உள்ளன.

சுவிற்சர்லாந்து கடைசி லீக் போட்டியில் பிரான்ஸை சந்திக்கிறது. இதில் வெற்றி பெற்றால் மட்டுமே சுவிற்சர்லாந்து காலிறுதிக்குள் நுழையமுடியும். இங்கிலாந்து அணி கடைசி லீக் ஆட்டத்தில் குரோஷியாவுடன் மோதும்.

# வன்முறையில் ஈடுபட்டதற்காக இங்கிலாந்து ரசிகருக்கு சிறை!



ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டியின்போது வன்முறையில் ஈடுபட்ட இங்கிலாந்து ரசிகர் ஒருவருக்கு போர்த் துக்கல், நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இங்கிலாந்து - பிரான்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில், இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது. இதனால் வெறுப்படைந்த இங்கிலாந்து அணி ரசிகர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்களில் 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் 12 பேர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களாவர். ஒருவர் ரஷ்யாவைச் சேர்ந்தவர். மற்றொருவர் போர்த்துக்கலைச் சேர்ந்தவர்.

இந்த வன்முறையின்போது நடந்த தகராறில் 16 பேர் காயமடைந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கான விசாரணையில் ரஷ்யா, போர்த்துக்கலைச் சேர்ந்த ரசிகர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த 11 வீரர்கள் போர்த்துக்கலில் இருந்து வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் இந்த 11 ரசிகர்களும் வெளியேற்றப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.




# ஆசியக்கிண்ணப் போட்டி; அக்தருக்கு நிபந்தனை!

ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடவேண்டுமெனில், பயிற்றி முகாமில் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும் என்று சொஹைப் அக்தருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிபந்தனை விதித்துள்ளது.

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியின் பயிற்சிமுகாம் வரும் 28 ஆம் திகதி முதல் லாகூரில் நடைபெறவுள்ளது.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட்டில் விளையாடவேண்டுமெனில் அக்தர் உடற்தகுதி பரிசோதனையில் ஈடபட வேண்டுமெனறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி ரமீஸ்ராஜா தெரிவித்தார்.

இது குறித்து ரமீஸ்ராஜா கூறியிருப்பதாவது, அக்தரின் ஆலோசனைப்படியே ஆசிய கோப்பையில் அவரைத் தேர்வு செய்ய வேண்டாம் என்று நாங்கள் தீர்மானித்து இருந்தோம். மேலும், அக்தர் விளையாடி வரும் கவுண்டி அணியான டுராமும், அக்தர் முழுமையாக குணமடைய வேண்டியிருக்கிறது என்று எங்களுக்கு அறிவித்திருந்தது.

ஆனால், தான் முழு உடற்தகுதியுடன் இருப்பதாக அக்தர் அறிவித்ததைத் தொடர்ந்து ஆசிய கிண்ணப் பயிற்சி முகாமிற்கான பாகிஸதான் அணி வீரர்களின் பட்டியலில் அவரை அறிவித்துள்ளோம்.

இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவேண்டும் என்று தொலைபேசி மூலம் அக்தரிடம் கூறியுள்ளேன். மேலும் ஆசியக் கிண்ணப் போட்டியில் விளையாட வேண்டுமெனில் கடுமையான உடற்தகுதி பரிசோதனைகளுக்கு உட்பட வேண்டியது அவசியம் என்பதையும் அவரிடம் கூறியிருக்கிறேன்.

அவர் முழு உடற்தகுதியுடன் இருப்பதை உறுதிசெய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். மனோ ரீதியாகவும் அவர் பலமுடன் இருக்க வேண்டும் என்பது எங்களது விருப்பம்.

உடற்தகுதி விடயத்தில் எல்லா வீரர்களுக்கும் கடும் பரிசோதனைகள் நடத்தப்பட உள்ளன. இதற்கு அகதர் விதிவிலக்கு அல்ல.



இந்தப் பயிற்சி முகாமில் அவர் முழு உடற் தகுதியுடன் இருப்பதாக தீர்மானிக்கப்பட்டால், அதன் பின்பு தான் ஆசிய கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அக்தரின் பெயர் பட்டியலுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்.

# அமெரிக்க கிரிக்கெட் போட்டி இந்திய வீரர்களுக்குத் தடை!

அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட்போட்டியில் விளையாடுவதற்கு இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தடை விதித்துள்ளது.

அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியொன்றில் கலந்துகொள்ள இந்திய கிரிக்கெட் அணியின் இரண்டாம் நிலை வீரர்கள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், சர்வதேச கிரிக்கெட்சபை அறிவுறுத்தலின்படி இந்தப் போட்டியில் கலந்துகொள்ள இந்திய வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைச் செயலர் எஸ். கே. நாயர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்தப் போட்டியில் உறுப்பினர் நாடுகளைச்சேர்ந்த வீரர்கள் கலந்து கொள்ளக்கூடாது என்று சர்வதேச கிரிக்கெட்சபை அறிவித்துள்ளதைத் தொடர்ந்து இந்தப் போட்டியில் விளையாட இந்திய கிரிக்கெட் சபை அனுமதி மறுத்துள்ளது.

இந்தப் போட்டி அமெரிக்க கிரிக்கெட் சங்க ஆதரவுடன் நடக்கவில்லை என்பதால் சர்வதேச கிரிக்கெட்சபை இந்தப் போட்டிக்கு அனுமதி மறுத்துளளது.

மேலும், இந்தப் போட்டிக்காக எந்த வீரரையும் அனுமதிக்கக்கூடாது என்றும் சர்வதேச கிரிக்கெட்சபை உறுப்பினர் நாடுகளை அறிவுறுத்தியுள்ளது. இந்த அறிவுறுத்தலின் பேரில் இந்திய வீரர்கள் யாருக்கும் இந்தப் போட்டியில் விளையாட அனுமதி கிடையாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் விளையாட வினோத் காம்ப்ளி, ரோஹன் கவாஸ்கர், தினேஷ் மொங்கியா, ராகுல் சாங்வி, சரண்தீப் சிங், அமித் மிஷ்ரா, அஜய்ரத்ரா, அமித்பண்டாரி மற்றும் பல வீரர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தப் போட்டியானது கடந்த காலங்களில் இருந்து இங்கிலாந்தில் பிரபலமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் சபை

☞ தற்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் 100 ஆவது நோபல் பரிசைப் பெற்றவர்.

☞ ஐ.நா. சபையின் தலைமை அலுவலகம் நியூயோர்க்கிலுள்ளது.

☞ ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 10 நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளும் 5 நிரந்தரமான அங்கத்துவ நாடுகளும், அங்கத்துவம் வகிக்கின்றன.

☞ அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகியவையே நிரந்தரமான அங்கத்துவ நாடுகளாகும். இந்த 5 நாடுகளுக்கு மட்டுமே உலகில் வீட்டோ அதிகாரம் (இரத்துச் செய்யும்) உண்டு.

☞ நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளின் அங்கத்துவக் காலம் 2 ஆண்டுகள் ஆகும். இவற்றில் ஒவ்வொரு ஆண்டும் 5 அங்கத்துவ நாடுகளுக்கு ஓய்வு வழங்கப்பட்டு, அதற்குப் பதிலாக 5 புதிய நாடுகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

**2003 டிசம்பர் ஓய்வுபெற்ற நாடுகள்**

1. கெமரூன் 2. சிரியா 3. மெக்சிக்கோ 4. கென்யா 5. பல்கேரியா


**இந்த நாடுகளுக்குப் பதிலாக 2004 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் சேர்க்கப்பட்டுள்ள நாடுகள்.**

1.அல்ஜீரியா 2. பிரேசில் 3. ருமேனியா 4. பெனின் 5. பிலிப்பைன்ஸ்

## மூளைக்கு வேலை

ஒன்றிலிருந்து ஒன்பது வரையான இலக்கங்களைப் பயன்படுத்தி, ஒவ்வொரு பக்கமும் கூட்டினால், கூட்டுத்தொகை 17 வரும் படி அமையுங்கள்.


(விடைகள் அடுத்தவாரம்)



## வார்த்தை விளையாட்டு

### சென்றவார விடைகள்

1. அசைபோடுதல்.
2. போட்டா போட்டி.
3. டாம்பீகம்.
4. பீடபூமி.
5. மிதமிஞ்சுதல்.



### இடமிருந்து வலம்

1. கூத்து அல்லது விளையாட்டு நடைபெறுவதற்கான இடம்.
3. உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்தல்.
3. விரிசல்.

### மேலிருந்து கீழ்

2. தவிர்க்க இயலாத நிலை.
4. சீதோஷ்ணம்.

(விடைகள் வரும் வாரம்)

## எனது கிராமம்

வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் எழில் கொஞ்சும் கிராமமே எனது கிராமமாகிய வட்டக்கச்சி ஆகும். இந்தக் கிராமத்தில் 1953 ஆம் ஆண்டு குடியேற்றம் நிறுவப்பட்டது. எனது கிராமத்துக்குப் பெருமை சேர்க்கும் முகமாக அதன் எல்லையில், வடமாகாணத்திலேயே பெரிய குளமாகிய இரணைமடுக்குளம் அமைந்துள்ளது. அதற்கு நீர் வழங்கும் ஆறாக கனகராயன் ஆறு உள்ளது. எனது கிராமத்திலுள்ள பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள் இந்தக்கிராமத்துக்கு மேலும் மெருகூட்டுகின்றன. இந்தக் கிராமத்தில் பெரிய பாடசாலையாக கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் விளங்குகின்றது. இதற்கு அண்மையில் சூசையப்பர் ஆலயம், அஞ்சல் அலுவலகம், வைத்தியசாலை ஆகியன காணப்படுகின்றன. மேலும் வட்டக்கச்சியில் பாடசாலைகள், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், முன்பள்ளிகள், நூலகங்கள், பூங்காக்கள் போன்றனவும் காணப்படுகின்றன.

மேலும் இந்தக் கிராமத்தில் மாணவர்களின் முயற்சிகளை, திறன்களை எடுத்துக்காட்டும் முகமாக கிளி/இராமநாதபுரம் அ.த.க. பாடசாலை மாணவியர் அகில இலங்கை ரீதியான உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நீர்வளம், நிலவளம் அனைத்தும் காணப்படும். எனது கிராமத்திலுள்ள மக்கள் இயந்திரமயமற்ற, சுதந்திரமான, மகிழ்ச்சியான வாழ்வே வாழ்கின்றனர்.

எனது கிராமமாகிய வட்டக்கச்சி, இது போன்று என்றும் மகிழ்ச்சியுடனும், ஒற்றுமையுடனும் மேலும் சிறக்க வேண்டும்.

'வாழ்க எனது கிராமம் வட்டக்கச்சி'

*தனலக்ஷி,*
*தரம் - 9ஏ,*
*கிளி/வட்டக்கச்சி, மகா வித்தியாலயம்.*

## விடுகதையும் விடைகளும்

1. இழுத்துப் பிடித்தால் எழுந்து பறப்பான். விட்டுவிட்டால் விழுந்து விடுவான் அவன் யார்?
2. காலால் நீர் உறிஞ்சி தலையால் தாகம் தணிப்பான். அவன் யார்?
3. அம்மா சுடாத தோசை யாரும் உண்ண முடியாத தோசை. அது என்ன?
4. கறுப்பு மாமா பச்சைக் குடை பிடிக்கிறார். அவர் யார்?
5. சொன்னதையே சொல்வான். அவன் யார்?
6. வெளிச்சத்தில் உடன் வருவான் இருட்டில் வரமாட்டான். அவன் யார்?
7. ஆயிரம் அறை அத்தனையும் இனிப்பறை அது என்ன?

### விடைகள்

1. பட்டம் 2. தென்னைமரம் 3. நிலவு 4. பனைமரம் 5. எதிரொலி 6. நிழல் 7. தேன் கூடு.

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்



### சிந்தனைக்கு!

இதைச் செய்யலாமா? இதைச் செய்யக் கூடாதா என்று எப்போதும் பிறரைக் கேட்டுக் கொண்டிருப்பது அறியாமையையும், சோம்பலையுமே காட்டும்

## சிவப்புக் கொண்டைச் சேவல்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

சேவல் நான் எனக்கு உண்டு சிவப்புக் கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி பாழ் வயிற்றை நிரப்புகிறான். பாரீர், பாரீரே!

அரசன் கோபம் கொண்டான். சேவலை விரட்டும்படி சேவகர்களுக்குக் கட்டளை இட்டான் அதுவோ, ஒரு புறம் விலகி மறுபடி குரலெடுத்துப் பாடியது

சேவல் நான் எனக்கு சிவப்புக்கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடிங்கி பாழ் வயிற்றை நிரப்புகிறான். பாரீர், பாரீரே!

சேவலைப் பிடித்துக் காட்டுக் குதிரைகளின் லாயத்தில் அடைக்கும்படி சேவகர்களுக்குக் கட்டளை இட்டான் அரசன். காட்டுக் குதிரைகள் சேவலைக் குளம்புகளால் மிதித்துத் துவைத்து விடும் என்று நினைத்தான். அரசனுடைய சேவகர்கள் சேவலைப் பிடித்து லாயத்தில் கட்டிக் குதிரைகளின் காலடியில் எறிந்தார்கள்.

சேவல் வலது சிறகின் அடியில் இருந்த கரடியை வெளியே விட்டது. கரடி அரசனுடைய குதிரைகளைக் கிழித்துக் குதறிப்போட்டு விட்டது.

மறுநாள் காலை சேவர்கள் வந்து லாயத்தின் கதவைத் திறந்தார்கள்: சேவல் அவர்களுடைய கால்களுக்கு இடையே புகுந்து வெளியேறி, அரசன் வீட்டு யன்னல் அருகே உட்கார்ந்து பாடத் தொடங்கியது.



'சேவல் நான், எனக்கு உண்டு சிவப்புக் கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி, பாழ் வயிற்றை நிரப்புகிறான். பாரீர், பாரீரே!

அரசனுக்குத் தலை, கால் தெரியாத கோபம் வந்துவிட்டது. சேவலைப் பிடித்துக் கட்டி ஆடுகளின் கிடைக்குள் எறியும்படி உத்தரவிட்டான். காட்டு ஆடுகள் அதை முட்டிக் கொன்றுவிடும் என்று நினைத்தான்.

'சேவல் அஞ்சவில்லை. இடது சிறகின் அடியில் இருந்த ஓநாயை வெளியேவிட்டது. ஓநாய் ஆடுகளைக் கிழித்து எறிந்து விட்டது.

மறுநாள் காலையில் அரசனுடைய சேவகர்கள் பார்க்க வந்தார்கள். சேவல் அவர்களுடைய கால்களின் இடையே புகுந்து வெளியேறி, அரசனின் அரண்மனைக்குப் பறந்து போய், மறுபடியும் பாடத் தொடங்கியது.

'சேவல் நான், எனக்கு உண்டு சிவப்புக்கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை. ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி, பாழ் வயிற்றை நிரப்புகிறான். பாரீர், பாரீரே!

கோபத்தாலும், இயலாமையாலும் அரசனின் உடம்பு படபடத்தது. இந்தச் சேவலிடமிருந்து எப்படித் தப்புவது என்று அவனுக்குப் புரியவில்லை!

சேவகர்களைக் கூப்பிட்டான். இரும்புத் தொட்டியைப் பழுக்கக் காய்ச்சி, சேவலை அதில் போடும்படி உத்தரவிட்டான். சேவல் அதில் பொரிந்து போகும் என்று நினைத்தான்.

சேவகர்கள் சேவலைத் தொட்டியில் போட்டார்கள். சேவலோ தொண்டைப் பையிலிருந்து குளத்தை வெளியே கொட்டியது. தொட்டி நிறைந்து விட்டது. அது சூடு ஆறிப் போய்விட்டது.

மறுநாள் காலை சேவகர்கள் குளியலறைக்கு வந்து கதவைத் திறந்தார்கள். சேவல் அவர்களின் கால்களின் இடையே புகுந்து வெளியேறி, அரசனுடைய அரண்மனைக்குப் போய், மறுபடியும் பாடத் தொடங்கியது. "சேவல் நான், எனக்கு உண்டு சிவப்புக் கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி, பாழ் வயிற்றை நிரப்புகிறான், பாரீர், பாரீரே!"

அரசனுக்குத் தலை சுற்றியது. இன்னும் என்ன செய்வது என்று யோசித்தான். சேவலைப் பிடித்து சமைத்து தனக்கு பரிமாறும்படி சேவகர்களுக்கு உத்தரவிட்டான். அரசன் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தான். சேவல் வேகும்வரை காத்திராமல் அப்படியே சமைக்காமல் முழுதாக விழுங்கிவிட்டான்.



அரசன் சேவலை விழுங்கிய பிறகும் அது அவன் வயிற்றிலிருந்து மறுபடியும் பாடியது.

சேவல் நான், எனக்கு உண்டு சிவப்புக் கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி, பாழ் வயிற்றை நிரப்புகிறான், பாரீர், பாரீரே!"

"வெளியே வா, சேவலே! என்னை அமைதியாக இருக்கவிடு! நானும் உன்னைத் தொடமாட்டேன்!" என்று சேவலிடம் கெஞ்சினான் அரசன்.

"வெளியே வரமாட்டேன். சின்னஞ்சிறு அனாதைக் குழந்தைகளுடைய திரிகையை நீ திருப்பிக் கொடுத்தால் வருவேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் பாடத் தொடங்கியது சேவல்.

சேவல் நான், எனக்கு உண்டு சிவப்புக் கொண்டை, பாவி இந்த மன்னனுக்கோ அதுவும் இல்லை! ஏழை அனாதைக் குழந்தைகளின் திரிகையைப் பிடுங்கி, பாழ் வயிற்றை நிரப்புகிறான், பாரீர், பாரீரே!"



குடிபடைகள் சூழ நின்று இந்தப் பாடல்களைக் கேட்டார்கள் பாவி மன்னனை ஏளனம் செய்து சிரித்தார்கள். கெட்ட அரசன் என்ன செய்வான்? அனாதைக் குழந்தைகளுக்குத் திரிகையைத் திருப்பிக் கொடுப்பதைத் தவிர அவனுக்கு வேறுவழி இல்லாமல் போனது. சேவல் அரசன் வயிற்றிலிருந்து வெளியே குதித்து வீட்டுக்கு ஓடியது. அண்ணனும், தங்கையும் தங்கள் சேவலைக் கண்டு ஆனந்தக் கூத்து ஆடினார்கள்.

அப்போது முதல் அண்ணனும், தங்கையும் அவர்களுடைய சேவலும் மறுபடியும் இன்பமாக வாழ்ந்தார்கள். திரிகை அவர்களுக்கு வகைவகையான பண்டங்களை வேண்டிய அளவு செய்து கொடுத்தது. அவர்களும் வயிறார உண்டார்கள், மற்றைய ஏழைகளுக்கும் உணவு கொடுத்தார்கள்.

(முற்றும்) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- தே. கார்த்தீபன்
கற்கும் பாடசாலை :-
வதிரி திரு இருதயக் கல்லூரி
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
விளையாட்டு, கதைகள் வாசித்தல்.

முழுப்பெயர் :- அ. சகாயகலின்ரா
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு அன்னம்மாள் பாடசாலை
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, நடனம்,
ஓவியம் வரைதல்.





முழுப்பெயர் :- சி. குருநாத்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணக் கல்லூரி
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்,
புத்தகம் வாசித்தல்.

முழுப்பெயர் :- தி. சாரங்கன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், சிறுகதை எழுதுதல்,
கதை நயத்தல்.

முழுப்பெயர் :- எம். கிஸ்ரபெல் ஜெயந்தினி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- க. தயானந்தன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்,
கட்டுரை வரைதல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................


.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

## உங்கள் கைவண்ணம்



பு. சுமித்திரா - தரம் - 9
குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்



அ. அர்ச்சதன்
தரம் - 2
யாழ். செ. அ. த. க. பா.

இங்கே மடிக்கவும்



## அன்புள்ள சிறுவர்களே!



உங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி இந்த வாரம் பார்ப்போம். உங்களிடம் யாராவது படிப்பைப் பற்றிக் கேட்டால் - உடனடியாக எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் பாடங்கள் விளங்குவதில்லை. கடினமாக இருக்கிறது. ஆசிரியர்கள் கவனமெடுத்துப் படிப்பிப்பதில்லை என்று பதில் கூறுவீர்கள். அப்படித்தானே?

சரி, இப்பொழுது நான் ஒரு கேள்வி உங்களிடம் கேட்கிறேன். பதில் கூறுங்கள். எப்போதாவது உங்களுடைய படிப்புடன் தொடர்புடைய பலம், பலவீனத்தைப் புரிந்துகொள்ள முயற்சித்திருக்கிறீர்களா? இல்லையென்றால், இனி மேல் முயற்சியுங்கள்.

உங்களுடைய பலம், பலவீனம் போன்றவற்றைப் படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு பட்டியலாகத் தயாரிக்க வேண்டும். மற்றவர்களை ஆலோசித்து உங்களுடைய பட்டியலைத் தயாரிக்கக் கூடாது. இதனால், எந்தப் பயனும் இல்லை. படிப்புடன் சம்பந்தப்பட்ட பட்டியலாக இருக்கவேண்டும். அது முக்கியம். உங்களைப் போன்ற மாணவன் ஒருவர் தயாரித்த பட்டியலைத் தருகிறேன். அதைப் போல் உங்களுடைய பட்டியலைத் தயாரியுங்கள். அப்போதுதான் உங்களுடைய பலவீனங்களை முழுவதும் புரிந்துகொள்ள முடியும். அதன்மூலம் பலத்தை அதிகரிக்கலாம், வாய்ப்புக்களைப் பயன்படுத்தலாம்.

| பலம் | பலவீனம் |
|---|---|
| 1. நல்ல ஞாபக சக்தி | தேர்வின்போது பயம் |
| 2. விஞ்ஞான பாடத்தில் ஆர்வம் | அடிக்கடி தலைவலி |
| 3. வீட்டில் சந்தேகங்களைக் கேட்டுப்படிக்கலாம். | கணித பாடத்தில் பலவீனம் |

இவ்வாறாக உங்களின் பட்டியலைத் தயாரியுங்கள். அதனை எவ்வாறு பயன்படுத்துவதென்று வரும் வாரம் பார்ப்போம்.

பாசமுடன் - சாரு அக்கா

## புதிர்கள்

1. ஏழு மாம்பழங்களைப் பன்னிரண்டு பேருக்குச் சம்மாகப் பங்கிட வேண்டும். ஒரு மாம்பழத்தை அதிகமாக நான்கு துண்டுகள் வெட்டலாம். அதற்கு மேல் வெட்டக் கூடாது. எப்படி பங்கிடுவது?

2. மந்திரி ஒருவர் ராஜாவையும், மகாராணியையும் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தார். அவர் வீட்டில் மூன்றே மூன்று தங்கத்தட்டுகள் இருந்தன. மந்திரி, தனக்கும், ராஜாவுக்கும், ராணிக்கும் மூன்று தட்டுகளில் விருந்து பரிமாறினார். அங்கே அவரது தங்கையும் இருக்க வேண்டி வந்தது. அனைவரும் சாப்பிட்டு முடித்தனர். அப்படியெனில் மந்திரி, ராஜா, ராணி, மந்திரியின் தங்கை நால்வரும் எப்படி மூன்று தட்டுக்களில் சாப்பிட்டிருப்பார்கள்?

3. யாழ்ப்பாணத்திலிருந்து வாகனம் ஒன்றில் சாவகச்சேரிக்கு போவதற்கு 1 மணித்தியாலமும் 50 நிமிடங்களும் எடுக்கின்றது. அதன் பின்பு சாவகச்சேரியிலிருந்து அதே வாகனத்தில் யாழ்ப்பாணம் வருவதற்கு, இரண்டு மணித்தியாலத்திற்கு 10நிமிடம் இருக்கும்போது வரமுடிந்தது எப்படி?


(விடைகள் அடுத்தவாரம்)

## வினோத உயிரினங்கள்

1. பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
2. பித்தப்பையில்லாத முலையூட்டி - எலி
3. அதிக நீர் அருந்தும் பறவை - புறா
4. மண்டையோடு, அலகு என்பன ஒரு எலும்பால் அமைக்கப்பெற்ற பறவை - மரங்கொத்தி
5. ஞாபக சக்தி கூடிய விலங்கு - யானை
6. கண்கள் மூலம் வியர்வை வெளியேற்றும் உயிரினம் - முதலை

சி. நிறோஜன் தரம் - 4 யாழ்ப்பாணக்கல்லூரி

## சித்திரக் கதை - உலாவிய தொப்பி



## அறிவியல் என்றால் என்ன?

அறிவியல் என்பது ஏதோ ஒரு அதிசய நிகழ்வு அல்ல. எம்முடைய அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலுமே அறிவியல் இருக்கிறது.

அறிவியல் நோக்கத்துக்குப் பல உட்கூறுகள் உள்ளன. முதலில் எதையும் கூர்ந்து அறியவேண்டுமென்ற ஆவலை ஏற்படுத்தவேண்டும். அடுத்தது உற்று நோக்குதல். அதன் பிறகு அந்த நிகழ்வைப் பற்றிக் கற்பனை செய்து பார்க்க வேண்டும். பின்பு பகுத்தறிய வேண்டும்.

சோதனைகளைச் செய்து பார்ப்பது அடுத்த கட்டம். சின்னச் சின்ன விடயங்களையும் அக்கறையுடன் கவனிக்கவேண்டும்.

நாம் சிந்திக்கின்ற விடயத்துக்காகப் பல்வேறு இடங்களில் தகவல்களைச் சேகரிக்கவேண்டும். தகவல்களையும், நாம் சிந்தித்த விடயங்களையும் ஒப்புநோக்க வேண்டும். எம்முடைய செயற்பாடுகளை நிரூபிக்கவேண்டும். நிரூபித்த பின் முடிவுகளை எட்டவேண்டும். முடிவுகளின்போது புதிதாக எழக்கூடிய பிரச்சினைகளைக் கண்டறியவேண்டும். மீண்டும் சரியாகச் செய்து பார்க்க வேண்டும்.

இது தான் அறிவியல் வழிமுறை.

இந்த வழி முறையைப் பின்பற்றித்தான் நாம் அறிவியலைக் கற்கிறோம். அறிவியல் என்பது அறிவு வேட்கையையும், பகுத்தாய்வதையும் தெளிவான சிந்தனையையும், சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதையும், உள்ளடக்கியது.

ஆதி மனிதனின் இந்தச் சிந்தனைப் போக்குத்தான் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குக் காரணம்.

அறிவியல் மனிதனை மேலும் மேலும் வல்லமையுடையனவாக ஆக்குகிறது. அத்தகைய அறிவியலை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைகிறது.

அறிவியலால் ஆக்கபூர்வமான விடயங்களை அணுகுகிறோமா அல்லது அழிவுக்குப் பயன்படுத்துகிறோமா என்பதே முக்கியம்.

ஒவ்வொரு விடயத்தையும் அறிவியல் வழிமுறைப்படி ஆராய்ந்து செய்தால், பல விஞ்ஞானிகள் உருவாக முடியும். நாடும் உயரும் நாமும் உயர்வோம்!

**அறிவியல் மக்களுக்காக,**
**அறிவியல் நாட்டிற்காக,**
**அறிவியல் புதிய கண்டுபிடிப்புக்களுக்காக!**
**என்பதை மனதில் கொண்டு செயற்படுவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா போர்த் தயாரிப்பிற்கே யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்துகிறார்

## நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்



யுத்தநிறுத்தத்தை போருக்கான ஆயத்தப்பணிகளை மேற்கொள்ளவே ஜனாதிபதி சந்திரிகா பயன்படுத்துகிறார் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கண்டனப் பேரணியின் முடிவில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது இருந்த நிலைமையிலும் பார்க்க மாறுபட்ட ஒரு சூழ்நிலையினை தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில் காண்கின்றோம்.

அழிந்த பொருளாதாரத்தையும், இராணுவ பலத்தையும் சீர்செய்யும் முயற்சிக்காகவே ஜனாதிபதி யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் கையாள்கிறாரே தவிர மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அல்ல.

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் அரசும், அரச படைகளும் பல்வேறு படுகொலைகளையும் மேற்கொள்கின்றன.

கருணா என்னும் தேசத்துரோகியை தமது கைக்கூலியாகக் கொண்டு பல்வேறு கொலைகளையும் யுத்தநிறுத்த மீறல்களையும் மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் மலையகப் பகுதியில் நடைபெற்ற தமிழ் மக்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடைபெற வேண்டுமென வலியுறுத்தினோம்.

அந்த விசாரணைகள் நடைபெற்று வரும் வேளையிலேயே மீண்டும் தமிழர் மீதான தாக்குதல்கள் நடந்துவிட்டன. நாடாளுமன்றில் கூட சாதிக்காததை தமிழீழ விடுதலைப் புலிகள் பினனால அணி திரள்வதன் மூலம் நாம் சாதிக்க முடியும்.

தமிழர் தாயகத்தின் விடிவைப் பெற ஒரேவழி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நாம் அனைவரும் இணைந்து கொள்வதே என அவர் மேலும் தெரிவித்தார்.

**கனகரட்ணம்**
**(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)**

தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதை சகல சர்வதேச நாடுகளும் அறிந்து கொண்டும் அவை தொடர்ந்தும் அரசிற்கு இறுக்கமான அழுத்தங்களைக் கொடுக்காமல் இருப்பது மனவேதனை அளிக்கும் செயலாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அணியில் அனைவரும் ஒன்று திரள்வதன் மூலமே தமிழரின் உரிமையும் உண்மைச் சுதந்திரமும் கிடைக்கும். எமது கரங்களில் ஆயுதங்கள் மீளவும் முழங்கவேண்டிய கட்டாயத்தை ஜனாதிபதி ஏற்படுத்திவருகின்றார்.

**தவச்செல்வம்**
**(யாழ். ஊடகவியலாளர் சங்கத் தலைவர்)**

இன்று வடக்கு கிழக்கில் பத்திரிகையாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவ்வாறாயின், பொதுமக்கள் எப்படி பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழமுடியும். வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசு இடைக்கால நிர்வாகசபையை உடன் வழங்க வேண்டும்.

**சூரியகுமார்**
**(வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்)**

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்படுமானால் நாம் பிரிந்து செல்லவேண்டிய நிலையே உருவாகும்.

அரசும் அதன் முக்கிய அமைச்சர்களும் தமிழ் மக்கள் விடயத்தில் சரியான போக்கைக் கடைப்பிடிக்காவிட்டால் அது தமிழீழத்திற்கே வழி வகுக்கும் என்றார்.

## கணக்குப் பதிவாளர் இடமாற்றம்

(மட்டுவில்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கணக்குப் பதிவாளராகக் கடமையாற்றிய ப.சுதன் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஈச்சிலம்பற்று பிரதேச செயலகத்திற்கு சமூகசேவை உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ளார். (24)




# வளிமண்டல பணிப்பாளரின் கலந்துரையாடல் பேரணியால் ரத்து

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்த வளிமண்டலத் திணைக்கள பணிப்பாளரின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடந்த கண்டனப் பேரணியால் கைவிடப்பட்டது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் ரூபசிங்க தலைமையிலான குழுவொன்று கடந்த புதன்கிழமையன்று யாழ்ப்பாணத்திற்கு வருகைத்தந்திருந்தது.

இவர்கள் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் யாழ் செயலக அதிகாரிகள் மற்றும் யாழ். வானிலை ஆராய்ச்சித்திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை நடத்தி அதனூடாக இடி, மினனல் தாக்கம், கால மாற்றம், சூறாவளி என்பன தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அவற்றினை அறிந்து கொண்டு எதிர்வு கூறுவது தொடர்பாக விளக்கமளிக்க விருந்தனர்.

எனினும், நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இதனால், யாழ். செயலகத்தில் பெருமளவிலான மக்கள் திரண்டுவந்து மகஜர் சமர்ப்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இதனையடுத்தே இந்தக் கலந்துரையாடல் கைவிடப்பட்டது.

இதேவேளை, இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகத்திற்கு வானிலை தொடர்பான சில புத்தகங்களையும் வழங்கியதாகத் தெரியவருகிறது.

இவர்கள் யாழ். திருநெல்வேலிப் பகுதியில் வானிலை ஆராய்ச்சி நிலையத்தைப்போல், யாழ். மாவட்டத்தின் வேறு பிரதேசத்திலும் வானிலை ஆராய்ச்சி நிலையமொன்றை அமைப்பது தொடர்பாகவும் ஆலோசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# அறநெறிப் பாடசாலையில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படங்கள் விஷமிகளால் சேதம்

அறநெறிப்பாடசாலையொன்றில் வைக்கப்பட்டிருந்த ஊர்ப்பெரியவர்களின் உருவப்படங்கள் விஷமிகள் சிலரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலையில் நடைபெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவொன்றின் போதே இணுவிலில் வாழ்ந்த சித்தர்கள் சமய, சமூகப் பெரியார்களின் உருவப் படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந்தத் திரை நீக்க விழாவின்போது, பெருமளவான மக்களும் முக்கியஸ்தர்கள் பலரும் இருந்தனர்.

இந்த உருவப்பட திரைநீக்கம் தொடர்பாக சிலருக்கு கருத்து வேறுபாடு இருந்ததாகவும் அதன் எதிரொலியாகவே இந்த திருவுருவப் படங்கள் நிலத்தில் போட்டு உடைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(94)

# நகரின் முக்கிய சந்திகளில் பொலிஸ் சோதனை தீவிரம்

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப்பொலிஸார் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பலாலி வீதி மற்றும் காங்கேசன் துறை வீதிகளின் முக்கிய சந்திகளில் சோதனை நடவடிக்கையில் ஈடுபடும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் ஆகியவற்றைப் பரிசோதனை செய்துவருகின்றனர்.

கடந்த இரண்டு தினங்களாக காங்கேசன்துறை வீதியினூடாகப் பயணம் செய்த வாகன உரிமையாளர்களை சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரங்கள் இல்லாமற் பயணம் செய்தமை, தலைக்கவசம் அணியாமல் பயணம் செய்தமை போன்ற குற்றங்களுக்காக 150ரூபா முதல் 500ரூபா வரை குற்றப்பணம் அறவிடப்படுகிறது. (லெ)

## கணபதி ஹோமம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய "கணபதி ஹோமம்" நாளை நடைபெறவுள்ளது.

நாளை காலை 8.30 மணிக்கு சிவசிறி சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறவுள்ளன.

நாட்டின் அமைதியும், சாந்தியும், சமாதானமும் நிலவ மக்கள் ஒன்று கூடி 14ஆவது ஆண்டாக நடத்தும் கணபதி ஹோமம் இதுவாகும். (23)

## வருடாந்த மஹோற்சவம்

(உடுவில்)

உடுவில் ஸ்ரீ சிவஞான விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து பத்துதினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (101)

## கணித, விஞ்ஞான செய்முறை பயிற்சிப் பட்டறை

இன்றும், நாளையும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஜே.ஐ.சி.ஏ. நிறுவனத்தின் அனுசரணையுடன் கணித, விஞ்ஞான செய்முறைப் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய கல்வி நிறுவனமும் ஜே.ஐ.சி.ஏ நிறுவனமும், இணைந்து வெளியிடப்பட்ட புதிய செய்முறைப் பயிற்சிகள் கலந்துரையாடப்படவிருக்கின்றன.

இந்தச் செய்முறை பயிற்சிப்பட்டறையில் 12 அயற்பாடசாலைகளைச் சேர்ந்த கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் பங்குபற்றி பயன்பெறவுள்ளனர்.

இந்தச் செய்முறைப் பயிற்சிப் பட்டறையில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் தி.கதிர்காமநாதன், ந.உலகநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணிக்க வாசகர் குருபூசை

அளவெட்டி சைவ வாலிப சங்கமும், ஊர்ப் பொதுமக்களும் இணைந்து நடாத்தும் மாணிக்க வாசகர் குருபூசை இந்த முறையும் அளவெட்டி கேணிக்கனா வைரவர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள இந்தக் குருபூசை தினத்திலே விசேட அபிஷேகம், பூசைகள், நாயனார் திருவீதியுலா, புராண படிப்பு என்பன இடம்பெறவுள்ளதுடன் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (94)

## அளவெட்டி அம்மன் கோவிலுக்கு புதிய சித்திரத்தேர்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலுக்கு புதிய் சித்திரத்தேர் ஒன்றை அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தேர் ஐம்பது லட்சம் ரூபா செலவிலே அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தேரினை சிறந்த முறையிலே விரைவாக அமைப்பதற்கு தேர்த் திருப்பணிச் சபையினர் அம்மன் அடியார்களிடம் நிதியுதவியை வேண்டியுள்ளனர்.

தற்போது இந்த ஆலய வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று, வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (94)

## விடியோ படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டம் வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் நெறியாளர் மஜிட் மஜிடி இயக்கிய 'BARAN' என்ற ஈரானிய படம் ஆங்கில உபதலைப்புகளுடன் காண்பிக்கப்படும். அத்துடன், 'உறுதி' எனும் குறும்படமும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. படத்தின் இறுதியில் கலந்துரையாடல் இடம்பெறும்.

## அரியாலைப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன

அரியாலை தபால் கட்டைச் சந்திக்கு அண்மையில் "ஹலோட்ரஸ்ட்" நிறுவனத்தினர் மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தபால்கட்டைச் சந்திக்கு அண்மையில் உள்ள காணிகள் மற்றும் இராணுவ முகாமுக்கு எதிராக உள்ள காணிகளினதும் மிதிவெடி அகற்றும் பணிகள மேற்கொள்ளப்பட்டு வருகிறது.(25)



பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களில் வடபிராந்திய இணைப்புக் குழுவினால் யாழ்ப்பாணம் ஒஸ்மானியக் கல்லூரி மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



வார நோக்கு

யாழவன்

# இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையில் சந்திரிகா
# சமாதானத்தின் எதிர்காலம் ஆபத்தான கட்டத்தில்

> **புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபுத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் சர்வதேச சமூகத்துக்குக்கூட மாற்றுக் கருத்து இருக்க முடி யாது. ஏனெனில், புலிகள் தமது இடைக்கால தீர்வு யோசனையை அரசிடம் சமர்ப்பித்தபோது, சர்வதேச நாடுகள் பலவும் அதனை ஒரு வரலாற்று சம்பவமாகக் கருதி வரவேற்றிருந்தனர்.**

கடந்தவாரம், தமிழ் மக்களுடைய சமாதான வழியிலான விடுதலைப் போராட்ட நகர்வுகளில் சில முக்கியமான வரலாற்றுப் பதிவுகளைத் தோற்றுவித்த சம்பவங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட கையோடு, தமது இயல்பு வாழ்வு திரும்பிவிடுமென எதிர்பார்த்த தமிழ் மக்களுக்கு அடுத்தடுத்து ஏமாற்றங்களும், இயல்பு வாழ்வுக்குப் பதில் மேலும் இடர்பாடுகளும், தோற்றுவிக்கப்பட்ட சூழலை எதிர்த்து, தமது தொடரும் அஹிம்சைப் போராட்டங்கள், கண்டனப் பேரணிகள், மகஜர் கையளிப்புக்கள் வரிசையில் கடந்த இரு தினங்களுக்கு முன்னரும் மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடைபெற்று முடிந்துள்ளது. இது சமாதான வழியின் விடுதலை நகர்விலே ஒரு முக்கியமான செய்தியாகும்.

இத்தோடு, விடுதலைப் புலிகள் சமாதானம் மீது வைத்துள்ள, வைத்திருந்த அதீத நம்பிக்கையைத் தற்போதைய அரசினது செயற்பாடுகள் குறைத்துள்ள ஒரு நிலையும் கடந்த வாரம் வெளிப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் இந்த விடயம் தொடர்பாக தமது கருத்தை வெளியிட்டுள்ளமையும் நோக்கற்பாலது.

மேலும், தற்போதைய அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவுள்ள முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால், பொது நிகழவொன்றில் பறக்கவிட்ட சமாதானப் புறா - கழுத்தொடிந்து வீழ்ந்து இறநத சம்பவமொன்று கடந்த வாரம் இடம்பெற்றிருந்தது.

இவற்றைவிட, மன்னார் நகரில் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் இருவரை இராணுவத்தினர் சோதனையிட முயன்றமையினால், பின் ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்களும், புலிகளின் முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கான கடற்பயணம் இடைநடுவிலே கைவிடப்பட்டமையுமென இன்னும் பல சம்பவங்களும் நடந்து முடிந்துள்ளன.

இந்தச் சம்பவங்கள் அனைத்துக்குப் பின்னாலும் ஒரு பொதுவான நிலைப்பாடு இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதாவது, இந்தச் சம்பவங்கள் அனைத்துமே இலங்கை அரசாங்கத்தின் சமாதான இரட்டை வேடதாரித்தனத்தின் வெளிப்பாட்டினாலேயே தோற்றுவிக்கப்பட்டமையாகும்.

அத்துடன், இந்த நிகழ்வுகளுள் சில - மேலும் சமாதான நகர்வுகளுக்கான முட்டுக்கட்டைகளாகவும் வந்து வீழ்ந்துள்ளன.

ரணில் தலைமையிலான அரசு - இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கையிலெடுத்து, எதுவித பாரதூரமான நிபந்தனைகளுமின்றி, விடுதலைப் புலிகளுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, சடுதியான சர்வதேச நாடுகளின் தலைநகரங்களிலே ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி முடித்ததும், தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் ஏதோ சமாதான வழிமூலமாக நல்லதொரு தீர்வு கிட்டவுள்ளதென நம்பியிருந்தனர்.

ரணில் அரசு சில சந்தர்ப்பங்களில் தவிர்க்கமுடியாது கடைப்பிடித்த நெகிழ்ச்சித் தன்மையானது, சாதாரண பொதுமக்களிடம் பலவிதமான எதிர்பார்ப்புக்களையும், நம்பிக்கையுணர்வுகளையும் ஊட்டியிருந்தது.

பல வருடங்களாக இழந்துள்ள தமது இருப்பிடங்களுக்கு மீண்டும் செல்லலாம், சொந்த மண்ணிலே சுகமாக வாழலாம், ஊர்க் கோயிலில் ஒன்றாகக்கூடிக் கழிக்கலாம், எங்கள் கடலிலே சுதந்திரமாகத் தொழில் செய்து, எமது சொந்தக் கால்களிலே நிற்கலாம், தடைப்பட்டுப்போயுள்ள இளம் பிள்ளைகளின் கல்வியை மீண்டும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டுள்ள தமது பாடசாலைகளிலே தொடரலாம், இறுதி மூச்சைத் தமது உழைப்பிலே கட்டிய வீட்டிலே விடலாம், ஊர்ச்சுடலையிலே வேகலாம் என்றெல்லாம் தமிழ் மக்களில் பலர் எண்ணியிருந்த எதிர்பார்ப்பானது - சமாதான நகர்வுகள் ஆரம்பமாகி இரண்டரை வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை எள்ளளவேனும் நிறைவேறவில்லை.

இதனால் ஏமாற்றமடைந்த தமிழ் மக்கள் - தமது எதிர்ப்புணர்வுகளை அவ்வப்போது பல வடிவங்களிலே காட்டியிருந்தனர். ஒரு கட்டத்திலே அவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து, சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை யும் நடாத்தியிருந்தனர். ஆனால், எவையுமே உரியபலனைப் பெற்றுத்தராத சந்தர்ப்பத்திலே, மீண்டுமொரு முறை மாபெரும் கண்டனப் பேரணியொன்றையும் நடாத்தியுள்ளனர்.

இந்தப் பேரணியின் முடிவிலும் வழமைபோல ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுக்குமான மகஜர்களும் கையளிக்கப்பட்டன. இந்த மகஜர்களுக்கு எவ்வளவுதூரம் மரியாதை வழங்கப்படும் என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

சமாதானப் பாதையிலே ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலே, ஈடுபாடு காட்டிய ரணில் அரசாங்கமே நிறைவேற்றமுடியாத விடயங்களையே - தற்போதைய சந்திரிகா தலைமையிலான அரசு நிறைவேற்றுமென அப்பாவிப் பொதுமக்கள் நம்புகிறார்கள். இவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, தனது சமாதான விசுவாசத்தனத்தை சந்திரிகா அரசு ஓரளவிற்கேனும் காடடவேண்டும். அப்போதுதான் சமாதான வழியில் நம்பிக்கையை இழந்து வரும் வ்டுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் திருப்திப்படுத்த முடியும்.

அதனைவிடுத்து நேரம் ஒரு கதையென மாறிமாறி அறிக்கைவிட்டு - நாட்டு மக்களையும், சர்வதேச அரசியலையும் குழப்பி வருவது சநதிரிகா அரசுக்கு முறையான செயலாக அமையமுடியாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை சந்திக்கும்போது, இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவே முதலில் பேசப்படுமென உறுதிமொழி வழங்குவதும், பின்னர் ஆட்சியை - கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யுடன் இணைந்து தக்கவைப்பதற்காக, இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதுவும் பேசப்படமாட்டாது என தெரிவிப்பதும், சந்திரிகா அரசினதும், குறிப்பாக சந்திரிகாவினதும் சமாதான ஆவலை கேள்விக்குள்ளாக்கி வருகிறது.

ஜனாதிபதியின் இந்த இரட்டை வேடதாரித்தனமே - விடுதலைப் புலிகளுக்கு சமாதானப் பாதையிலே நம்பிக்கையீனத்தை தோற்றுவிக்கும் காரணியாக அமைந்துள்ளது. இது சில சந்தர்ப்பங்களில் சந்திரிகா அரசினது திட்டமிட்ட செயற்பாடாகவும் இருக்கலாம்.

அதாவது புலிகளுக்கு சமாதான வெறுப்பை ஊட்டி, பேச்சுவார்த்தைகளிலிருந்து விலக வைத்து, வலிந்து போரை ஆரம்பிக்கச் செய்வதன்மூலம், சர்வதேச சமூகத்துக்கு சமாதானத்துக்கு எதிராக புலிகளையும், புலிகளுக்கு எதிராக சர்வதேசத்தையும் திருப்பி விடுவதே சந்திரிகா அரசின் கபடத்தனமான நோக்காகும். இதனைச் சர்வதேச சமூகம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

சர்வதேசத்தை புலிகளுக்கு எதிராக திருப்பிவிட சந்திரிகா தீட்டும் சதி வலையானது, சிலவேளைகளில் தனக்குத்தானே பின்னிக்கொள்ளும் வலையாகவும் அமைந்து விடலாம். ஏனெனில், அநேகமான சர்வதேச நாடுகளும், அவற்றின் பிரதிநிதிகளும் தற்போது புலிகளையும், அவர்களது செயற்பாடுகளையும், நோக்கங்களையும் நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். இதனாலேயே அவர்கள் அடிக்கடி வன்னிக்கு வருவதும் போவதுமாகவுள்ளனர்.

அண்மையில்கூட சர்வதேச உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த அறுபத்து மூன்று பிரதிநிதிகள் - தமிழர் தாயகத்திலே மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் விரிவாக ஆராயந்துள்ளனர்.

சமாதானத்தை பகடைக்காயாக வைத்து, அதன்மூலம் சர்வதேச நிதியுதவியைப் பெற்று, அதன்மூலமாக தென்னிலங்கையை விரிவுபடுத்த சந்திரிகா அரசு தீட்டும் நயவஞ்சக, ஓரவஞ்சக திட்டமானது - விடுதலைப்புலிகளுடனான சர்வதேச பிரதிநிதிகளின் சந்திப்பை அடுத்து பிசுபிசுத்துப் போகலாம்.






தற்போது வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை மையமாகக்கொண்டு இயங்கும் தொண்டு நிறுவனங்களில் பல - இலங்கைக்கு உதவிவழங்க முன்வந்திருக்கும் நாடுகளையே தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்றன. இதனால், நிறுவனங்களினூடாக வெளிநாட்டு அரசு அன்பளிப்புச் செய்யும் தொகையானது, உண்மையிலேயே போரினால் பாதிககப்பட்ட வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தை வந்தடையும்.

எனவே, சமாதான நகர்வுகளை தள்ளிப் போடுதலானது - இலங்கை அரசுக்கே அதிக பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். அரசு இன்று வரையும் தனது போர் அக்கறையை கைவிடுவதாக தெரியவிலலை. பல நாட்டுப் படைகளுடன் இணைந்து, போர்ப் பயிற்சி முகாம்களை நடாத்துவதும், ஆயுதக் கொள்வனவிலே இரகசியமாக ஈடுபடுவதுமென அரசு போர் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறானதொரு நிகழ்விலேயே, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பறக்க விட்ட சமாதானப் புறா - கழுத் தொடிந்து வீழ்ந்த இறந்துள்ளது. இதனையோர் அபசகுனமான நிகழ்வாகவே தென்னிலங்கை சமாதான விரும்பிகள் சிலர் நோக்குகின்றனர். இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை பொறுத்தவரையில, தனிப்பட்ட ரீதியிலே அவர் சமாதானப் புறாவை பறக்க விடுவதற்கு தகுதியான ஒருவர் அல்ல. ஒரு முழு இனவாதியான அவர் - முன்னர் பிரதமராக இருந்த காலத்திலே, இலங்கை ஓர் பௌத்த சிங்கள நாடு எனத் தனது கருத்துக்களை மேடையிலே முழங்க விட்டார். சந்திரிகா அரசு சமாதானத்தை முன்னர் முன்னெடுக்காமல், போர் வெறிபிடித்து உழன்றதுக்கு ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் ஒரு காணரமாக இருந்தவர்.

அவர் மீண்டும் ஒரு பொறுப்பு வாய்ந்த பதவியிலே அமர்த்தப்பட்டுள்ளார். மீண்டும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எனும் தோரணையிலே- வீதிச்சோதனைகளும், இராணுவ கெடுபிடிகளும், கொழும்பு நகரிலே ஆரம்பித்து விட்டன. இராணுவத்தினருக்கு போரியல் பயிற்சிகளும், அமெரிக்க பயிற்சி பெற்ற இராணுவ நிபுணர்களினாலே வழங்கப்பட்ட வண்ணமுள்ளது. இவையெல்லாம் சமாதானத்திலே பற்றுக்கொண்ட ஒரு அரசின் நடவடிக்கைகளாக இருக்க முடியுமா? ஒருபோதும் இருக்கமுடியாது.

சமாதான எதிர்ப்புணர்வைத் தொடர்ந்து தக்கவைத்துள்ள ரட்ணசிறி விக்கிரமநாயக்க பறக்கவிட்ட சமாதானப் புறா - வீழ்ந்து இறந்தது ஒன்றும் அதிசயக்கத்தக்க விடயமல்ல.

மேலும் சமாதானம் மீது அளவுள்ள நம்பிக்கை வைத்து, அதன் வழியிலேயே இறுதித்தீவை அடைய முயன்றுவரும் விடுதலைப் புலிகளுக்கு, தற்போது அரசினுடைய சமாதான நகர்வுகள் தொடர்பாக முழுமையான ஐயப்பாடொன்று எழுந்துள்ளது.

ஆரம்பம் முதலே இந்த ஐயமானது அவர்களுக்கு இருந்து வந்தாலும், சமாதானப் பயணம் இரு வழிப் பயணம் என்பதனால், அதனை வெளிக்காட்டாமல் பற்றுறுதியோடு செயற்பட்டு வந்தார்கள். ஆனால், இனியும் பொறுக்கமுடியாது என்ற சூழலிலேயே அவர்கள் நோர்வே தரபபினூடாக தமது ஐயப்பாட்டையும், அதிருப்தியையும் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.

புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபுத் திட்டத்தை அடிப்படையாகக்கொண்டே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் சர்வதேச சமூகத்துக்குக்கூட மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஏனெனில், புலிகள் தமது இடைக்கால தீர்வு யோசனையை அரசிடம் சமர்ப்பித்தபோது, சர்வதேச நாடுகள் பலவும் அதனை ஒரு வரலாற்று சம்பவமாகக் கருதி வரவேற்றிருந்தனர்.

சநதிரிகா நாடாளுமன்றைக் கலைத்து, புதிய பொதுத் தேர்தலை நடாத்தாது இருப்பின், ரணில் அரசு முன்னெடுத்துச் சென்றிருக்கும் சமாதான நகர்வானது, நிச்சயமாக இடைக்கால வரைபு தொடர்பானதாக 'ஆராயும் ஒன்றாகவே இருந்திருக்கும்.

ஏனெனில், பேச்சுவார்த்தையின் நகர்வுகள் அத்தகையதொரு கட்டத்திலேயே அப்போது இருந்து வந்தன. எனவே, விட்ட இடத்திலிருந்து பேசுவோம் என புதிய அரசு கூறுவது மானசீகமானதாக இருந்தால், உண்மையிலேயே இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாகவே தற்போது பேசவேண்டும்.

அதனை விடுத்து வேறு பல புதிய விடயங்களை நுழைக்க முயலுவதும், இறுதித் தீர்வு பற்றி பேச நினைப்பதும் முட்டாள்தனமான விடயமாகும்.

ஆனால், இடைக்கால நிர்வாக வரைவு பற்றி பேசுவதற்கு ஜே.வி.பி ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லையென்பது தெட்டத்தெளிவாகத் தற்போது புலனாகியுள்ளது.

இதனால் இரு தலைக்கொள்ளி எறும்புபோல சந்திரிகா தள்ளாடிக் கொண்டிருக்கிறார். ஜே.வி.பியை திருப்திப்படுத்துவதா? அல்லது தமிழர் தரப்பின் கோரிக்கைக்கு இணங்கிப்போவதா? இதுவே இன்று சந்திரிகா முன்னுள்ள கேள்வியாகும்.

சமாதானத்தை நகர்த்த தான் முயல்வதாக காட்டிக்கொள்ள முனையும் ஜனாதிபதி, ஜே.வி.பி வழிக்கு வராத விடயத்தையும் அவ்வப்போது தொட்டு வருகிறார். இறுதியிலே சமாதானம் குழம்பியமைக்கு ஜே.வி.பியினரே முழுக்காரணம் என, காரணம் கற்பித்து விடவும் வாய்ப்புக்களுள்ளது. எனவே, இவ்வாறானதொரு வரலாற்று பழியை ஜே.வி.பி தனதாக்கிக் கொள்ளக்கூடாது. இதுவே அனைவரதும் வேண்டுகோளாகும்.

அரசு தரப்பும் சில கட்டாய நிர்ப்பந்தங்களின் பேரிலே, தமது சமாதான காட்சிகளை அவ்வப்போதும் அரங்கேற்ற வேண்டியுள்ளது. இதன் ஒரு கட்டமே புலிகளின் முல்லைத் தீவிலிருந்து திருகோணமலைக்கான கடற்பயணம் ஆகும். இந்தப் பயணமானது கடற்படையினரால் சில காரணங்களை மையமாக வைத்து. இடைநடுவிலே புலிகளின் படகுகள் வழிமறிக்கப்பட்டு திருப்பி யனுப்பப்பட்டன. அனுமதி பெற்றதற்கு மேலதிகமாக போராளிகளையும், படகுகளையும் கொண்டுசெல்ல கடற்படையினர் புலிகளை அனுமதிக்கவில்லை. இதனாலேயே கடற்பயணம் இடைநடுவிலே நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஆனால், கடற்படையினர் ஒன்றைத் தெளிவாக புரிந்துகொள்ள வேணடும். அதாவது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலே எழுதப்பட்டது வெறும் புரிந்துணர்வு உடன்படிக்கையே. எனவே அங்கு விட்டுக்கொடுப்புகளும், புரிந்துணர்வுகளும் அவசியமானதொன் றாகும். அதனை கடற்படை மட்டுமன்றி, அனைத்து படையினரும் உணர வேண்டும்.

இல்லாவிடில், மன்னார் நகரிலே இரு பெண் போராளிகளை சோதனையிடுவதற்கு இராணுவத்தினர் முயன்றிருக்கமாட்டார்கள்.

இராணுவத்தினர் புரிந்துணர்வுடன் செயற்பட்டிருந்தால், பொதுமக்கள் அநியாயமாகக் காயப்பட வேணடியும், சொத்துக்களை இழக்க வேண்டியும் ஏற்பட்டிருக்காது.

எனவே, படையினர் 'புரிந்துணர்வை' தம்மத்தியிலே வளர்த்துக் கொளளவேண்டும். இதுவே சமாதானப் பாதையை பாதித் தூரத்துக்கு மேலே நகர்த்தும் உந்து சக்தியாகும்.

இதனை இராணுவத்தினர் உணர்ந்து கொண்டு உயர்பாதுகாப்பு வலயங்களையும் சற்று பின் நகர்த்தி மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முனைவார்களா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமே.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விட்டுக் கொடுப்பை அரசே செய்ய வேண்டும்

அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் உள்ள தெளிவின்மை மற்றும் உறுதியின்மை காரணமாக சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்களில் இழுபறிநிலை அல்லது முடக்கநிலை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ள நிலையில், அரசே அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் சமாதானம் தொடர்பான தமது பற்றுறுதியை மிகவும் திட்டவட்டமாக அமைதி முயற்சிகளின் ஆரம்பகட்டத்திலிருந்தே இலங்கை அரசுக்கும், சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வே அரசுக்கும் மட்டுமல்லாது சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படையாகவே தெரிவித்துவருவதுடன், நியாயமானதும், சரியானதும் எந்த விதமான கபடத்தனமான உள்நோக்கங்களைக் கொண்டிராததுமான சமாதானம் தொடர்பான சகல முன்னெடுப்பு முயற்சிகளுக்கும் தமது பரிபூரண ஒத்துழைப்பை வழங்கியே வந்துள்ளனர்.

தமிழ்மக்களின் இன்றைய நெருக்கடிகள், துயரங்கள், இழப்புக்கள், அவலங்கள் அனைத்துக்கும் கடந்த காலங்களில் ஆட்சி பீடத்தில் அதிகாரபலம் கொண்டு மேலாதிக்கம் செலுத்திய சகல அரசுகள் மட்டுமே காரணம் என்பது, ஒவ்வொரு சமாதான காலத்திலும் சமாதானம் பேசவந்த அனைவரும் ஏதோ ஒரு கட்டத்தில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டேயுள்ளனர்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் இனவெறி அரசுகளின் திட்டமிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து சாத்வீக ரீதியில் நியாயம் கேட்க முனைந்த போது அதனை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள அரசு முடிவு கொண்டு சிறுபான்மையினருக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்த முட்டாள்தனத்தின் விளைவினை கடந்த இரு தசாப்தகாலமாக இந்த நாடு அனுபவித்து வருகிறது.

முள்ளை முள்ளால் எடுப்பதுபோல துப்பாக்கிமுனைகளை துப்பாககி முனையாலேயே எதிர்கொள்ளவேண்டிய, தவிர்க்கமுடியாத தற்பாதுகாப்பு நிலையை தமிழ்மக்கள் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படச் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களே காரணம்.

இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையிலேயே தமிழ் மக்கள் தம்மை ஆயுதபாணிகளாக்கி கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

தமது வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்காக பயங்கரவாதிகள் என்ற அவதூறான பட்டத்தைத் தாங்கிக்கொண்டு அரச பயங்கரவாதத்தை அதன் சகல வடிவங்களிலும் எதிர் கொணடு அழிக்கும் தர்மயுத்தத்தில் தமிழ் மக்கள் சந்தித்த துன்ப துயரங்களும், கொடுத்த விலையும் மிக மிக அதிகம். இன்று வரலாறு தமிழ் மக்களை நிமிர்ந்தும், அவர்களின் போராட்டத்தை வியந்தும் உலகம் பார்க்கும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

கடந்த இரண்டாண்டுக்கும் மேலான சமாதான காலம் இலங்கை இனப்பிரச்சினையின் நிஜப்பரிமாணங்களை உலகம் புரிந்து கொள்ள ஓரளவுக்கேனும் வாய்ப்பளித்ததெனலாம்.

இதன்காரணமாக இன்று சமாதான நகர்வுகளை முன்னெடுக்குமாறு சர்வதேச அழுத்தம் இலங்கை அரசின்மீது என்றுமில்லாத அளவுக்கு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இது இலங்கை அரசும், ஜனாதிபதியும் ஒருபோதுமே எதிர்பார்க்காத ஒன்றேயாகும். இலங்கையரசின் மீதான சர்வதேச அழுத்தத்திற்கு வேறும் சில புவிசார் அரசியல் காரணிகளும் இருக்கலாம். அது வேறு விடயம்.

ஆனால் இலங்கை அரசின் மீதான இன்றைய அழுத்தமானது அதன் சமாதானம் மீதான பற்றுறுதியின் பலவீனத்தை மட்டுமல்லாது அதன் பேரினவாத நிலைப்பாட்டையும் வெளிப்படுததத் தொடங்கியுள்ளது எனலாம்.

இன்றைய நிலையில் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை நியாயமான முறையில் இடைக்காலநிர்வாக அதிகாரசபை குறித்த விடயத்திலிருந்து ஆரம்பிக்கத் தயக்கம் காட்டும் அரசு, இறுதித் தீர்வுக்கான பேச்சுக்களையும் ஏக காலத்தில் தொடரவேண்டும் என நிபந்தனை விதிப்பது சாத்தியமற்றதும், அர்த்தமற்றதுமாகும்.

பேச்சுவார்த்தைகள் - ஒரு படிமுறை வளர்ச்சிப்போக்கில் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே, இரு தரப்பினரிடையேயும் நம்பிக்கையும் புரிந்துணர்வும் ஏற்படும் என்பதுடன் இறுதித்தீர்வு குறித்த விடயத்தில் உறுதியுடனும் விசுவாசத்துடனும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் முடியும் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

சமாதான முன்னெடுப்புக்களில் விடுதலைப் புலிகள் மிகுந்த தீவிர முனைப்புடனும், வெளிப்படையாகவும் இயங்குவது இன்று உலக சமூகத்தால் வெகுவாகப் பாராட்டப்படும் விடயமாகியுள்ள நிலையில் புலிகள் விட்டுக்கொடுப்பு செய்யவேண்டுமென அரசு எதிர்பார்ப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருப்பது விசித்திரமானதாகும்.


அமைச்சர் கூறும் விட்டுக்கொர்டுப்பு என்பது அரசின் நிபந்தனைகளுக்கு விடுதலைப் புலிகள் இணங்கவேண்டும் என்ற தொனியை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

எல்லாவற்றையும் இழந்த மக்களிடம் அல்லது அந்த மக்களின சார்பில் பேசுபவர்களிடம் இன்னும் விட்டுக்கொடுப்பு செய்யுங்கள் என்று கேட்பது நாம் எதனையும் தரமாட்டோம் என்ற அரசின் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் கருதலாமல்லவா?

விட்டுக்கொடுப்பை செய்து நியாயமாக செயற்படவேண்டியதும் அதன்மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்பி இறுதித்தீர்வு தொடர்பான எதிர்பார்ப்பை உறுதிப்படுத்தவேண்டியது அரசின் பொறுப்பேயாகும்.

அதைவிடுத்து அரசு தனக்குள்ளான உட்கட்சி முரண்பாடு, தோழமைக் கட்சிகளின் அழுத்தம் காரணமாக சமாதான முயற்சிகளில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திணறிக்கொண்டு விடுதலைப் புலிகளை விட்டுக்கொடுப்பு செய்யக்கோருவது அர்த்தமற்றதாகும. விட்டுக்கொடுப்பு செய்து நெகிழ்வுப்போக்கை கடைப்பிடிக்க வேண்டியது அரசும், அதன் கூட்டணிக் கட்சிகளும், பேரினவாத சக்திகளும் மட்டுமேயாகும்.

## நாடும் நடப்பும்




### குடியேற அனுமதிக்கப்படாமையை எதிர்த்து

# நாவற்குழி வீட்டுத்திட்டக் குடும்பங்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(நாவற்குழி)

நாவற்குழி வீட்டுத்திட்டத்திலிருந்து 61 குடும்பங்களை வெளியேறுமாறு கிராமசேவையாளர்கள் வற்புறுத்திவருவதாகத் தொவித்து யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, நாவற்குழி அரச வீட்டுத்திட்டத்தில் உள்ள 298 வீடுகளில் 2001ஆம ஆண்டு இடப்பெயர்வின்பின் அனைத்து வீடுகளுமே பெரிதும் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தன.

அவற்றைத்திருத்தி மீளக்குடியேறுமாறு கடந்த வருடம் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் ஒரு தொகைப்பணம் (50 ஆயிரம் ரூபா) வழங்கப்பட்டிருந்தது.

அதனைக் கொண்டு வீடுகளைத் திருத்தி மீண்டும் குடியேறு மாறு தெரிவிக்கப்பட்டது. எனினும், அத்தொகை எமது வீடுகளைப் புனரமைக்க போதியதாக இல்லை எனச் சுட்டிக்காட்டிய அவர் மேலும் ஒரு தொகைப்பணம் தருவதாகத் தெரிவித்தார்.

ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் பொறுப்பானவர்கள் கைமாறிய பின் எமது நிலையும் நிர்க்கதியாக்கப்பட்டது.

நாம எமது வீடுகளில் குடியேறுமுகமாக எமது வீடுகளுக்குச் சென்று, கிராமசேவையாளரிடம் பதியச்சென்ற போது, நாம் இடம்பெயர்ந்து வந்து தங்கிய இடங்களிலேயே எம்மை வசிககுமாறும் எமக்கு நாவற்குழி பிரதேசத்தில் பதிவு மேற்கொள்ள முடியாதெனவும் தெரிவித்தார்.

மேலும், எமது குடியிருப்புக்களில் 130 மாத்திரமே அரசினால அங்கீகரிக்கப்பட்டதாகவும் ஏனையவை இன்னமும் அரசால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதனால் நாம் தற்போது இடம்பெயர்ந்து வசிக்கும் வீடுகளும் இல்லாமல் எமது குடியேற்ற வீடுகளும் இல்லாமல் பெரும் சிரமப்படுகிறோம். மனிதாபிமான அடிப்படையில் எமது இந்தப்பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அந்தப் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கததவர்கள் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (ப)

### மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு

# யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் இரண்டாயிரத்து இருநூறு வீடுகள்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் இரண்டாயிரத்து இருநூற்று ஐந்து வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்வுக்குள்ளான குடும்பங்களுக்கே இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அரை வீட்டுத் திட்டங்களாகவும், முழு வீட்டுத்திட்டங்களாகவும அமைந்துள்ளன.

பொதுமக்களின் தேவைக்கேற்பவும், நிதி நிலைமைக்கேற்பவும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதாக யாழ் செயலகத்தில் இயங்கும் யு.என்.எச்.சி.ஆர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடத்துக்கான வேலைத்திட்டங்கள் யாவும் இந்த வருடத்தின் மே மாதமளவிலேயே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இந்த வருடத்துக்கான பதினைந்து மில்லியன் ரூபாக்குாய வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பித்திருப்பதாகவும் இதில் ஏழைகள், அனாதைகள் மற்றும் வீடற்றோர் தொடர்பான பிரசசினைகளுக்கு இயன்றளவு உதவிகள் வழங்கப்பட உள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் சைவத்தைப் பரப்பிய குருக்களுக்கு கலாநிதிப் பட்டம்

கனடா, ரொறன்ரோ, நகரில் முதன் முதலாக சைவக் கோவில் கட்டி, சைவப் பாரம்பரியத்தைப் பரப்பிய குருக்களுக்கு கலாநிதப் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர் வரும் 23ஆம் திகதி கனடா ரொறன்ரோ நகரில் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த பஞ்சாட்சரஐயர் - விஜயலட்சுமி தம்பதியினரின் புதல்வர் விஜயகுமார் குருக்களுக்கே கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது.

இவர் புங்குடுதீவில் இருந்து கனடாவிற்குச் சென்று அங்கு குடியேறி அங்குள்ள புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்காக 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகிறார்.

கனடாவில் வாழும் புங்குடுதீவு வாழ் தமிழர் சமூகத்தின் ஏறபாட்டில் கலாநிதிப் பட்டம் வழங்கப்படவ்ள்ளது. இந்த நிகழ்வில் [illegible] வித்துவான்கள், சிவாச்சாரியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலயமட்ட எழுத்தாக்கப் போட்டிகள் நடைபெறவுள்ள திகதிகள் அறிவிப்பு

வலய மட்ட எழுத்தாக்கப்போட்டிகள் எதிர் வரும் ஜீலை மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எனவே கோட்ட மட்டத்திலான எழுத்தாக்கப் போட்டிகளை நடாத்தி ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னராக வலயமட்டப் போட்டிக்கு தெரிவாகிய மாணவர்களின் பெயர் விபரங்களை கோட்டக் கல்வி அதிகாரிகளூடாக வலயக் கல்விப்பணிமனையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுளளது.

வலய மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இந்துமகளிர் கலலூரி, ஆகிய பாடசாலைகளில் நடாத்தத்திட்டமிடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வருட தமிழ்த்தினப் போட்டியை முன்னிட்டு மொழித்திறன் போட்டிஜூலை மாதம் 23 ஆம் திகதியும் கலைத்திறன் போட்டி ஜூலை மாதம் 24 ஆம் திகதியும் நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தீ)

## ஐ.நா.வின் விசேட பிரதிநிதிகள் இன்று புத்தளத்துக்கு விஜயம்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் விஷேட பிரதிநிதிகள் இன்று புத்தளத்துகது விஜயம் செய்யவுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நலன் பேணும் அமைப்பின் உயர் அதிகாரி ஒட்சுகாவின் தலைமையிலான இந்தக்குழுவில் 69 பேர் இடம் பெறுகின்றனர்.

வடமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளத்திலுள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வசித்து வரும் சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்தக் குழுவினர் ஆராயவுள்ளனர். சமூக அபிவிருத்திக்கான ஆய்வு மன்றம் விடுதத அழைப்பையேற்று இந்த விஜயம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கண்ணோட்டம் - கனடாவிலிருந்து சுதர்மா

# இலங்கை அரச ஊடகங்களின் பொய்ப்பிரசாரங்கள்; இடைக்கால தன்னாட்சி சபையே இறுதி இலக்கு!




**கி**ழக்கு நிலைமைகள் தொடர்பான அரச ஊடகங்களின் தவறான பிரசாரம் குறித்து தங்களது கடுமையான ஆட்சேபனையை இலங்கை விடம் தெரிவிக்குமாறு நோர்வேயின் இலங்கைக்கான தூதுவரிடம் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் கடந்த புதன்கிழமையன்று தெரிவித்துள்ளார். குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது தமிழ்ச் சேவையினூடாக மேற்கொண்டு வரும் கிழக்கு நிலைமை குறித்த மலினத்தனமான பிரசாரங்களையும், தமிழ் மக்களிடையேயான பிரதேச வாதத்தைத் தூண்டும் பிரசாரங்களையும் மேற்கோள்காட்டியே தமிழர் தரப்பின் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இதே போன்றே, இவ்வாறான பொய்யான செய்திகளைப் பரப்பி மக்களை குழப்ப நிலைக்கு ஊடகங்கள் இட்டுச் செல்வதாக விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியற்பிரிவும் கவலை தெரிவித்துள்ளது. குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண்டுகள் சேனைப்பகுதியில் மோதல்கள் இடம்பெற்று வருவதாகப் பொய்யான செய்திகளை வெளியிட்டுள்ளதோடு, அந்தச் செய்தியை படையினருக்கும் விடுதலைப் புலிகளுமிடையே வவுணதீவில் நடந்த சந்திப்பில் விடுதலைப்புலிகள் ஒத்துக் கொண்டதாகப் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளது குறித்து மட்டு-அம்பாறை அரசியற்பிரிவு விசனம் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாகும் என்ற எதிர்வு கூறல் மற்றும் தமிழ்த் தேசிய முன்னணியுடனான கலந்துரையாடல், பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளில் சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நாட்டு மகளுக்கான வேண்டுகோள் போன்ற முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா கடந்த வாரம் ஈடுபட்டிருந்தார். ஆனால அவரது இந்த அறிவிப்புக்களையடுத்து அவர் ஒருவார கால விடுப்பில் கடந்த சனிக்கிழமை வெளிநாடு சென்று விட்டார். அவர் சென்ற சில நாட்களிலேயே அரச தரப்பால் மேற்கொள்ளப்படும் மேற்படி மலினத்தனச் செயற்பாடுகளின் பின்னணியை ஆராயவதே இப்பத்தியின் நோக்கம்.

சர்வதேச அனுசரணையுடனான இந்தப் பேச்சுவார்த்தைக்கான ஒப்புதலை அரசு வழங்கியபோது தனது பொருளாதார மீட்சியையே அது தனது தலையாய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. எனினும் தாங்கள் விரும்பும் பட்சத்தில் இந்தப் பேச்சுவார்த்தையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்றும் அது கடந்த கால அனுபவ அடிப்படையில் தீர்மானித்திருந்தது. அதாவது வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறாமை, திட்டமிட்ட கால இழுத்தடிப்புக்கள், தமிழர் தரப்பின் மீதான நேரடி மற்றும் ஐந்தாம் படைகள் மூலமான நெருக்கடிகள், சர்வதேச வலைப்பின்னல்கள் போன்ற காரணங்களால் தமிழர் தரப்பைச் சினங்கொள்ள வைத்து சமாதான முயற்சியிலிருந்து அவர்களை வெளியேற்ற முடியும் என அரசு திடமாக நம்பியது.

ஆனால் வரலாற்றோட்டத்தின் கட்டாயமாக மூன்று காரியங்கள் இச சமாதான காலத்தில் இலங்கைத் தீவில் நடந்தேறியுள்ளன.

1) பொருளாதார மீட்சிக்கான ஒரு செயற்பாடாக விரும்பியேற்கப்பட்ட சர்வதேச அனுசரணையால், இலங்கைத் தீவுக்கான சமகால உதவிகளுக்கான 'நிபந்தனையாக' சமாதானமே முன்வைக்கப்பட்டுள்ளமை,

2) புலிகளே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற நிலைப்பாடு ஜனநாயக ரீதியாக வாக்களிப்பு மூலமும் நிரூபிக்கப்பட்டு, தமிழ்த் தேசியம் என்ற கோட்பாட்டின் கீழ் தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டுள்ளமை,

3) வலிந்த சீனமூட்டல்கள், சீண்டல்கள் என்பவற்றிக்கு மத்தியிலும் தமிழர் தரப்பு சமாதானப் பேச்சில் காட்டும் பொறுமை ஆகியனவே அவை.

மேற்குறிப்பிட்ட மாற்றங்கள், தமிழர் தரப்புடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதைத் தவிர மாற்றுவழியெதனையும் அரசுக்கு விட்டு வைக்கவில்லை. ஆனால அப்படியான பேச்சைக்கூட தமிழர் தரப்பின் முன்நிபந்தனையுடனே மீண்டும ஆரம்பிக்க வேண்டிய அவலத்திற்குள் அரசு இப்போது சிக்கித் தவிக்கின்றது. ஆம் சமாதானப் பேச்சுக்கான ஆரம்பப்புள்ளியாக வட-கிழக்கிற்கான தன்னாட்சி இடைக்கால நிர்வாகமே உள்ளது. எனவே இந்த நிலையில் தமிழர்தரப்பின் நிகழ்ச்சிநிரலைக் குழப்புவதற்கான, தமிழர் தரப்பின் ஒற்றுமையைச் சிதறடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதையே அரசு தெரிவு செய்து கிழக்கை இதற்கான தளமாகப் பயன்படுத்தி வருகிறது.

இதன் ஒரு அங்கமாகவே கருணாவின் பிரதேசவாதத்திற்கான தாராள ஊக்குவிப்பு அரசு தரப்பால் கொடுக்கப்பட்டது. இருந்தும் தமிழர் தரப்பால் பிரதேசவாதம் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வேகம், நிதானம் என்பன அரசின் கணிப்பிற்கு மாறானதாக இருந்தது. அதுவே கருணா மீதான அரச நம்பிக்கையைத் தவிடுபொடியாக்கிதுடன் இலங்கை அரச-இராணுவ உயர் பீடத்தின் நேரடித் தலையீடு இவ்விவகாரத்தில் நிறையவே இருந்ததற்கான ஆதாரங்களை இச்சம்பவ முடிவு விட்டுச் சென்றது. குறிப்பாக முப்படைகளின் தளபதியே கருணாவிற்கு சரணாகதி வழங்குவோம் என்று தெரிவித்திருந்தமை சில உண்மைகளை வெளியுலகிற்குத் தெரியப் படுத்தியது.

எனினும் செல்லாக்காசாகிப் போன கருணாவின் பெயரைப் பாவித்துப் பிரதேசவாத நிகழ்வுகளை உயிர்ப்பிக்க, அரசபீடம் தொடர்ந்து கடுமையாக முயற்சித்து வருகிறது. புலனாய்வுத்துறை மற்றும் ஊடுருவற்துறை ஆகியவற்றின் செயற்பாடுகளே கருணாவின் பெயரால் இப்போது மேற்கொள்ளப்படுவதோடு, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசம் தமிழின விரோத செயற்பாட்டிடமாக முற்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவானவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை ஒருபுறத்தே மையப்படுத்திய செயற்பாடுகள் இராணுவத் துணைப்படைகளில் அங்கம் வகிப்போர் மற்றும் தமிழின விரோதக் குழுக்களின் துணையுடன் முன்னெடுக்கப்படுகிறது.

குறிப்பாக மட்டக்களப்பு நகர பிரதேசமானது நெருக்கமான சோதனைச சாவடிகள், அருகருகே அமைந்துள்ள முகாம்கள், அளவுக்கதிகமான படைகளின் பிரசன்னம், ஏனைய இடங்களுடனான போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் தூரளவசதி என அரச படைகளின் நேர்த்தியான கண்காணிப்பில் உள்ளது. இவ்வாறான பிரதேசங்களில் இடம்பெற்ற இக்கொலைகள் கூட இராணுவ நிலைகளுக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளமையானது இக்கொலையாளிகளுக்கும் படையினருக்குமிடையேயான நெருக்கமான உறவு குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அரச கட்டுப் பகுதியானது ஒரு பாதுகாப்பற்ற பிரதேசம் என்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறத்தே கிழக்கு மாகாண எல்லையோரங்களில் உள்ள படை முகாம்களிலிருந்து ஊடுருவல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் செல்லும் பாதையினூடாகப் பிரவேசித்தவர்களால் ஆயித்திய மலை மற்றும் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதல்கள் இதனை உறுதிப்படுத்தின. இதற்கு ஒருபடி மேலாக, அரச படைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நேரடியாகவே ஊடுருவியிருந்தது. இருந்தும் இச் சம்பவங்களில் விடுதலைப்புலிகள் காட்டிய பொறுமை அதற்கான தோல்வியாயிற்று.

இவ்வாறானதொரு நிலையிலேயே, பிரசாரரீதியாக இரண்டாம் தரச் செயற்பாடுகளை மேற்கொள்ள அரசு இப்போது நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மக்களைப் பதட்டமானதொரு நிலையில் வைத்திருக்கும் முயற்சியாக, தொப்பிகலவின் எல்லைப்பகுதிகளில் படைகள் மேற்கொள்ளும் பயிற்சிச் சூடுகள் மற்றும் எறிகணைவீச்சுக்களை விடுதலைப் புலிகளிற்கும் கருணா குழுவினருக்குமிடையேயான மோதலாகச் சித்தரித்துச் செய்திகளை வெளியிடுவதுடன், கருணாவுடன் தற்போதும் சிலர் மிஞ்சியிருப்பது போன்றும், அது ஒரு குழுவாகச் இயங்குவது போன்றதுமான தோற்றத்தை அரசாங்கம் கொடுக்க முனைந்துள்ளது.

இவ்வாறான பிரசார யுத்தத்திற்கு முன்னோடியான தயாரிப்புக்களில் அரச சார்பு ஊடகங்கள் ஈடுபட்டதைக் கடந்த வாரமே பிரபல சிங்களப் பத்திரிகையாளரான பந்துல ஜெயசேகராவின் ஆக்கமொன்று கோடி காட்டியது. கருணா தப்பியோடுவதற்கு முன்தினம் கருணாவைச் சந்தித்த இந்தப் பத்திரிகையாளர் ஏப்ரல் 12ஆம் திகதிக்குப் பின்னர் கருணாவுடன் தொடர்புகளதெனையும் தன்னால் மேற்கொள்ள முடியவில்லையென்று தெரிவித்துள்ளதோடு, கருணா தொப்பிகல காட்டிற்குள்ளேயே தொடர்ந்து இருக்கலாம் என்றும் எதிர்காலத்தில் அவர் என்ன செய்வார் என்பதைப் பொறுந்திருந்தே பார்க்கவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

சிங்கள இனவாதத்தின் உயர் பீடத்திற்கு நெருக்கமாக இருக்கும் ஒரு பத்திரிகையாளருக்கு கருணா இராணுவப் பாதுகாப்போடு தொப்பிகலவிலிருந்து தப்பிச் சென்றதோ அல்லது கருணா இப்போது தங்க வைக்கப்பட்டுள்ள இடமோ தெரியாத ஒன்றாக இருக்க முடியாது. ஆனால் அதனை மறைத்து அல்லது தவிர்த்து, கருணா தொப்பிகல காட்டிற்குள்ளேயே இருக்கலாம் என்று மேற்படி பத்திரிகையாளர் செய்தி வெளியிட்டதற்கும், தற்போதைய உண்மைக்குப் புறம்பான பிரதேசவாதச் செய்திகள் தொப்பிகலக் காட்டையும், கருணாவையும் மையப்படுத்தியே அரச தரப்பு ஊடகங்களால் புனையப்படுதவற்குமிடையே ஒரு உயிரோட்டமான தொடர்பு இருப்பது கண்கூடு.

எனவே கருணாவின் பிரிந்துபோகும் அறிவிப்பையும், பிரதேசவாதத்தையும் எவ்வாறு தனது ஊடகங்களினூடாக இலங்கை அரசு முதன்மையாக பிரசாரப்படுத்தியதோ, அதே போன்று இன்று தனது உளவியற்போர் முறையிலான செயற்பாடுகளுக்கும் அதே கருணாவின் பெயரைத் தாராளமாகப் பயன்படுத்திவருகிறது. இந் நடவடிக்கைகள் தமிழர் தரப்பினிடையேயான உள்ளகச் செயற்பாடுகளே என வெளியுலகிற்கு தெரிவிக்கும் அதேவேளை தமிழர் தரப்பினரின் சமாதானத்திற்குரிய அவதானத்தைச் சமாதான அரங்கிலிருந்து அகற்ற முயற்சிக்கும் அரசு தனது திறனுக்கு மீறியவகையில் அதனைச் செய்யவேண்டிய தேவையைக் கொண்டுள்ளது.

முக்கியமாக, தமிழர் தரப்பானது இடைக்கால நிர்வாகம் சப்பந்தமான நிலைப்பாட்டைக் கைவிடக்கூடிய புற-அகச் சூழ்நிலையை அடைய வேண்டும் என்பதற்கான சகல முயற்சிகளையும் சிங்களம் இனித் தொடந்து வெளிப்படையாகப் பரீட்சிக்கும். தனது இம்முயற்சிகள் தோற்கும் பட்சத்தில், தமிழர் தரப்பு பேச்சுமேசையிலிருந்து தன்னிச்சையாக விலகும் முடிவை எடுக்கும் வகையிலான நிர்ப்பந்தங்களை அது தமிழர் தரப்பின் மீது திணிக்கும். ஆனால் 'பலமான அத்திவாரத்தில்' நின்றபடி பேச்சுமேசைக்கு வந்த தமிழர் தரப்பானது, தம்மைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் இம் முயற்சிகளையே இலங்கை அரசின் உண்மை முகத்தை வெளிக்கொணரப் பயன்படுத்தும் பக்குவத்தை எப்போதோ பெற்றுவிட்டது.

## ஒரு படைப்பாளியின் நினைவாக... பகுதி - 7 - தி.ஞானசேகரன்

# மலையக இலக்கிய மறுமலர்ச்சியில் பங்காற்றிய எழுத்தாளர் கே. கணேஷ்

**முதுபெரும் எழுத்தாளரும் சிறந்த பத்திரிகையாளருமான கே.கணேஷ் அண்மையில் காலமானார் அவரின் நினைவாக இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

தமிழ் இலக்கியத்திற்கு எப்படி ஒரு பாரதியோ அதே போன்று சோவியத் இலக்கியத்திற்கு தராஸ் ஷெவ்சேன்கோ கே.கணேஷ் முதன் முதலில் தமிழில் அவரைப் பற்றிய அறிமுகத்தைச் செய்துள்ளார். தமிழகத்தின் பிரபல முற்போக்கு இதழான தாமரையில் அக்கவிஞரின் 'சாஸனம்' என்ற கதையின் தமிழாக்கமும் அவரின் சுருக்கமான வரலாறும் கணேஷினால் எழுதப்பட்டது.

'முன்னணி' (நவம்பர் 1948) என்ற சென்னையிலிருந்து வெளியான முற்போக்கு அரசியல் இலக்கிய வாரப்பத்திரிகையில் 'பிரச்சார இலக்கிய மேதை மாயாக் வாஸ்க்கி - ரஷ்யக் கவிஞர்' பற்றிய அறிமுகத்தை கணேஷ் எழுதியுள்ளார். முற்போக்குக் கலையிலக்கியவாதி கே.ஏ.அப்பாஸ் பற்றியும், டிட்டோ', 'மாசே துங்', கதிஸ்த்ரோ போன்ற உலகப் போராட்ட தலைவர்களின் வரலாற்றையும் கணேஷ் எழுதியுள்ளார். உள்ளக் குமுறலை உணர்ச்சியுடன் பாடிய உலகமகாகவி பெட்டோவ்.'.பி பற்றிய அறிமுகக் கட்டுரையையும் எழுதியுள்ளார்.

### சிறந்த அமைப்பாளர்.

கே.கணேஷ், தமிழகத்தில் இருந்த காலத்தில் சென்னையில் இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பு உருவாகியது. சக்திதாசன் சுப்பிரமணியம், கே.இராமநாதன், இ.மாயாண்டி பாரி ஆகியோருடன் இணைந்து இந்த அமைப்பை உருவாக்குவதில் கே.கணேஷ் பின்னணியில் நின்று உழைத்தார்.

1940 டாக்டர் முல்க்ராஜ் ஆனந்த் இலங்கைக்கு வந்தபோது, அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை முதன் முதலில் உருவாக்க முயற்சி எடுத்தவர்களின் கே.கணேஷ் முன்னின்று உழைத்தவர். தமிழ் சிங்கள எழுத்தாளர்களை முதன்முதலில் இணைத்து உருவாக்கிய சங்கம் இது. கொம்பனித்தெருவிலுள்ள பொல்ஸ்கி, ஹோட்டலில் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சுவாமி விபுலானந்த அடிகள் தலைவராகவும், மார்ட்டின் விக்கிரசிங்க உபதலைவராகவும், டாக்டர் சரத் சந்திர, கே.கணேஷ் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், பி.கந்தையா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கிய முக்கியஸ்தர்களில் ஒருவரான வடஇந்திய எழுத்தாளரான கே.ஏ. அப்பாஸ் 1945 இல் சென்னையில் நடந்த ஆந்திர முற்போக்கு எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவுக்கு வந்திருந்தார். அப்போது கணேஷ் தி.காசி, தமிழ்ஒளி, குயிலன், சக்திதாசன் சுப்பிரமணியம், ஆர்.வி. போன்றோரும் சேர்ந்து தமிழ் நாட்டில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதற்கான செயற்பாடுகளைச் செய்தனர். மயிலாப்பூர் ஏ.ஜி.வெங்கடாச்சாரி தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முதன் முதலில் அமைக்கப்பட்டது.

"இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1946 இல் தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தோர் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினர்களாக இருந்த கே.ராமநாதன், கே.கணேஷ் ஆகியோரே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உந்துதலையம், ஆற்றுப்படுத்தலையும் அடிக்கல்லாகக் கொண்டு இந்தியாவில் கே.ஏ.அப்பாஸ் முதலியோர் தலைமையில் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்று கணேஷும் ராமநாதனும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தனர். (பேராசிரியர் கா.சிவத்தம்பி - புதுமை இலக்கியம் தேசிய ஒருமைப்பாட்டு மாநாட்டு மலர் 1975)

பொதுவுடைமைக் கருத்துக்களை ஆதரித்த கே.கணேஷ், இலங்கை இடதுசாரி இயக்கத்தில் முக்கிய செயலுறுப்பினராகவும் இருந்தார். ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கலாசார குழுவுக்குப் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு தோழர் எஸ்.நடேசன் இணைந்து பணியாற்றினார்.

### சிறந்த பத்திரிகையாளர்

இந்தியாவில் இருந்த காலத்தில் கவிஞர் தமிழ் ஒளி, கவிஞர் குயிலன் ஆகியோர் சேர்ந்து நடத்திய தென்றல் பத்திரிகையில் சிலகாலம் பணியாற்றினார்.

கணேஷின் நண்பரான கே.ராமநாதன், வி.க.வின் நவசக்தி பத்திரிகையில் பணிபுரிந்தவர். பிற்காலத்தில் அவர் இலங்கை வந்து பல தொழிற்சங்கங்களை உருவாக்கினார். கே.ராமநாதனுடன் இணைந்து கொழும்பில் நவசக்தியிலும் தேசாபிமானியிலும் கணேஷ் சிலகாலம் பணிபுரிந்தார்.

1946 இல் தமிழின் முதல் முற்போக்குச் சஞ்சிகையான பாரதி இதழை கே.ராமநாதனுடன் இணைந்து ஆரம்பித்தார். இதற்கு மூலதனம் வேண்டியபோது, இவரது தந்தை இவருக்க் கொடுத்த தலாத்துஓய இடத்தை விற்று அதனை மூலதனமாகக் கொண்டே இச்சஞ்சிகையை ஆரம்பித்தார். 1946 இல் ஜனவரியில் தோன்றிய பாரதி, 1946 ஆகஸ்ட் வரையிலான எட்டு மாதங்களில் ஐந்து இதழ்களை வெளியிட்டுள்ளது. கே.ராமநாதன் இந்தியா சென்றதும் இரண்டு ஆண்டுகளின் பின் 1948 ஜனவரியில் அ.ந.கந்தசாமியுடன் இணைந்து ஆறாவது இதழை வெளிக்கொணர்ந்தார் கணேஷ் முற்போக்கு எழுத்தாளர்களை ஓரணியில் திரண்டு பணிபுரிய வைத்தது பாரதி. பாரதியின் கட்டுரைகள், ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த மாறுதல்களை நிகழ்த்தியிருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தல்

# விசாரணைகளை மேற்கொள்வதற்கு அமெரிக்க இராணுவ அதிகாரி நியமனம்



ஈராக்கிய கைதிகள் அமெரிக்கப் படைகளினால் நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்வதற்கு அமெரிக்க இராணுவம், சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவரை நியமித்துள்ளது. நான்கு நட்சத்திரங்களையுடைய ஜெனரலான போல் ஹேறன் என்பவரே விசாரணையை மேற்கொள்ள நியமிக்கப்பட்டவராவார்.

முன்னதாக இந்த விசாரணையினை ஈராக்கிலுள்ள அமெரிக்க கட்டளைத் தளபதி லெப்.ஜெனரல் றிக்காடோ சன்செஸ் என்பவரை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டிருந்தது. ஆனால், இவர் ஈராக்கிய கட்டளை அதிகாரியாக இருந்த காலத்திலேயே சிறைக்கைதிகள் துன்புறுத்தப்பட்டதனால் அவரை விலக்கி தற்போது போல் ஹேறன் நியமிக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ள போல் ஹேறன் அமெரிக்க இராணுவத்திற்கான ஆயுத விநியோக நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்தவராவார்.

அத்துடன் நீண்டகாலமாக இவர் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியும் வருகின்றார். ஜெனரல் ஹேறன் நியமிக்கப்பட்டமையானது ஈராக்கில் கட்டளை அதிகாரியாக உள்ள றிக்காடோ சன்சென்சையும் கூட விசாரணைகுட்படுத்தப்படலாமென பென்ரகனிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

ஆனாலும் ஈராக்கிய சிறைகளிலுள்ள கைதிகள் மனிதாபிமானத்துடன் தான் நடத்தப்படுவதாக அமெரிக்கா தொடர்ந்து கூறிவருகின்றது.

இதேவேளை ஈராக்கில் முக்கிய தீவிரவாதியொருவர் இரகசியமான இடததில் அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்டின் உத்தரவுக்கமைய வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இரகசியமான இடத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த முக்கிய தீவிரவாதி யாரென்பதோ எந்த நாட்டவர் என்பதோ இதுவரை வெளிவரவில்லை.

இதேவேளை ஆப்கான் சிறையிலிருந்து அமெரிக்க இராணுவத்திற்குத் தகவல் வழங்கிவந்த சிறைக் கைதியொருவர் மற்றைய கைதியொருவரினால் நேற்றுமுன்தினம் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார்.




# ஜோன்ஸனைக் கண்டுபிடிப்பதற்கு சவுதி அதிகாரிகள் தேடுதல் வேட்டை!



(றியாட்)

சவுதி தலைநகர் றியாட்டில் அமெரிக்க பொறியியலாளர் ஒருவர் இனந்தெரியாத இஸ்லாமிய ஆயுததாரிகளால் கடந்த வாரம் கடத்தப்பட்டார். தற்போது இவரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் சவுதி அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான சவுதியின் அதிகாரிகள் நகரைத் தழுவிய ரீதியில் வீட்டிற்கு வீடு சென்று கடத்தப்பட்ட அமெரிக்கப் பிரஜையான ஜோனசனை கண்டுபிடிப்பதற்கு தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

விசேடமாக இருபது பேரடங்கிய குழுவொன்றும் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சவுதியின் அதிகாரிகள் செய்தி நிறுவனமொன்றுக்கு தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட ஜோன்சனை விடுதலை செய்வதற்கு என்ன தேவையோ அதனைச் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஆனால், தீவரவாதிகளின் கோரிக்கைக்கு அடிபணியப் போவதில்லையெனவும் சவுதி மற்றும் அமெரிக்க அரசாங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜோன்சன் வளர்ந்த அமெரிக்காவின் ஈகில்ஸ்வூட், நியூ ஜேசி போன்ற இடங்களில் அவரது நெருங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மெழுகுதிரிகளை ஏற்றி நேற்றுமுன்தினம் இரவுமுழுவதும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தந்தையார் தினத்தன்று எனது தந்தையாரை விடுதலை செய்து வீட்டிற்கு கொண்டுவருமாறு ஜோன்ஸனின் மகன் அமெரிக்க மற்றும் சவுதி அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

கடத்தப்பட்ட ஜோன்ஸனை கடந்த செவ்வாய் இஸ்லாமியத் தீவிரவாதிகள் இணையத்தளமொன்றில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் காண்பித்ததுடன் சிறையிலுள்ள தமது உறுப்பினர்களை அடுத்த 72 மணித்தியாலத்திற்குள் விடுதலை செய்யாவிட்டால் அவர் கொல்லப்படுவாரென எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ஜென்ரீனாவில்

# நிலக்கரி சுரங்க விபத்தில் 7 தொழிலாளர்கள் பலி

ஆர்ஜென்ரீனாவில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் ஏழு சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழுந்ததுடன் மேலும் ஏழு தொழிலாளர்கள் காணாமற்போயுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நிலக்கரித் தொழிற்சாலையில் ஊழியர்கள் கடமையாற்றிக்கொண்டிருக்கையில் திடீரெனத் தீ சுவாலை விட்டு எரிந்தவேளையிலேயே இந்த ஏழு தொழிலாளர்களும் உயிரிழந்ததுடன் மற்றைய ஏழு தொழிலாளர்கள் காணாமற்போயுள்ளனர்.

காணாமற்போன ஏழு தொழிலாளர்களும் நிலக்கரிச் சுரங்க பாதுகாப்பு அறையினுள் பாதுகாப்பாக இருப்பார்கள் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் ஐம்பது நிலக்கரி ஊழியர்கள் இந்தச் சம்பவத்திலிருந்து தப்பியுள்ளனர். காணாமற்போன ஏழு தொழிலாளர்களையும் தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி காணாமற்போனவர்களைத் தேடும் பணி நடைபெறுகின்றது.

இந்த விபத்து நடந்த இடத்தைச் சுற்றிவர காணமற்போன தொழிலாளர்களின் உறவினர்கள் நிற்பதனை அரச தொலைக்காட்சி ஒளிபரப்பியது. சுரங்கத் தொழிலாளர்களும் நம்பிக்கையிழந்த நிலையில் மிகவும் சோகத்துடன் காணப்பட்டனர்.

இந்தத் தொழில் மிகவும் கடினமானது. நாம் ஆறு மணித்தியாலங்களே பணிபுரியவேண்டும். ஆனால், 21 மணித்தியாலங்கள் பணி புரிகின்றோம் என சுரங்கத் தொழிலாளி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற இடத்தை ஆர்ஜென்ரீன ஜனாதிபதி நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

# இஸ்லாமிய தீவிரவாதத் தலைவர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானின் தென்பகுதி மாகாணமான வசிறிஸ்தான் பகுதியில் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்தது.


நெக் மொகமட் என்பவரே நேற்று முன்தினம் இரவு நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டவராவார். கொல்லப்பட்ட இவர் பாகிஸ்தான் படைகளுக்கெதிரான பல தாக்குதல்களில் ஈடுபட்டவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கொல்லப்பட்டமையானது பாகிஸ்தான் இராணுவத்திற்கு மிகப் பெரிய வெற்றியென இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சௌகாத சுல்தான் தெரிவித்தார்.

மற்றுமொரு இஸ்லாமியத் தலைவரான சேர் சமான் என்பவருடன் தங்கியிருந்தவேளையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இநதப் பகுதியில் வாழும் மக்கள தெரிவிகையில் - கிளர்ச்சித் தலைவரான மொகமட்டுடன், சமானின் இரு புதல்வர்களும், அவரது பேரப் பிள்ளை ஒன்றும் ஓலைக் குடிசையொன்றில் இருந்தவேளை, பாகிஸ்தான் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும், அதன்போது நால்வரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

பாகிஸதான் படையினர் தீவிரவாதிகள் மறைந்திருந்த பிரதேசமான வசிறிஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்திய வேளை, தாக்குதற் ஹெலிகளைப் பயன்படுத்தி றொக்கட் தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.



கொல்லப்பட்ட மொகமட் கடந்த மார்ச் மாதத்திலிருந்து பாகிஸ்தான் படையினருக்குக்கெதிராக பல தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான், நேபாளம் நாடுகளில் பஸ் விபத்தில் 49 பேர் பலியாகினர்!



பாகிஸ்தான் மற்றும் நேபாளம் நாடுகளில் இடம்பெற்ற இருவேறு பஸ் விபத்துக்களில் 49 பயணிகள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் ராவல்பிண்டிப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 37 பயணிகள் உயிரிழந்தனர். 10 பயணிகள் படுகாயமடைந்தனர்.

பயணிகள் பஸ் பாலமொன்றின் மேல் சென்றுகொண்டிருந்த சமயம் பின்னால் வந்த பஸ் அதன்மீது மோதியதாகவும், அவ்வேளை முன்னால் சென்ற பஸ் கீழிருந்த ஆற்றுக்குள் விழுந்ததாகவும் பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மற்றும் ஆறறில் விழுந்த பஸ்களின் உடைந்த பகுதிகளை மீட்புப் பணியாளர்கள் மீட்டெடுத்துள்ளனர்.

இதேவேளை மற்றைய சம்பவம் நேபாள தலைநகர் காத்மண்டுப் பகுதியில் இடம்பெற்றது. மலைப்பகுதி வீதியொன்றில் சென்றுகொண்டிருந்த பஸ் தவறி வீழ்ந்ததில் 12 பயணிகள் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைநதனர். சம்பவம் நடைபெற்ற வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதாகவும், மழை காரணமாக வழுக்கும் நிலையில் இருந்ததாகவும் நேபாளப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருத்த வேலைக்காக பிரதான வீதி மூடப்பட்டுள்ள நிலையில் வேறு இரண்டு குறுகலான வீதிகளே தற்போது நேபாளத்தில் பயன்படுத்தப் பட்டுவருகின்றன.

## ஈராக்கிலுள்ள ஜப்பான் படைகள்

# தொடர்ந்து தங்கியிருப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம்!

ஈராக்கிலுள்ள ஜப்பான் படைகள் தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்கவும், கூட்டணிப்படைகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் ஜப்பான் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜப்பான் அமைச்சரவையின் இந்த முடிவினால், ஜப்பானில் இரு மாறுபட்ட கருத்துக்கள் உருவாகும் நிலை ஏற்படுமெனவும், யுத்தத்திற்காக வெளி நாடுகளுக்கு ஜப்பான் படைகளை அனுப்புவதில்லை என்ற ஜப்பான் நாட்டு அரசியலமைப்பிற்கு இது முரணானதாக அமையுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் ஈராக்கிலுள்ள ஜப்பான் படையினர் மனிதாபிமான பணிகளையே மேற்கொள்வரென ஜப்பான் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி தெரிவித்தார்.

கூட்டணிப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் ஜப்பான் படைகள் இருந்தாலும் சுய பாதுகாப்பின் அடிப்படையில் ஜப்பான் படைகள் தமது நடவடிக்கைகளை தொடர்வார்கள். அத்துடன் ஜப்பானின் கட்டுப்பாட்டிலேயே அவர்கள் இயங்குகிறார்கள். எக்காரணம் கொண்டும் இராணுவ நடவடிக்கைகளில் பங்கெடுக்க மாட்டார்களென நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அமைச்சரவைச் செயலாளரான ஹிரோயுகி கொசோடா தெரிவித்தார்.


மக்களின் நிலைப்பாடுகளை அறிந்து, அதற்கேற்ற வகையில் ஜப்பான் தனது பங்களிப்பை வழங்குமென பிரதமர் கொய்சுமி தெரிவித்தார்.

அத்துடன் ஜப்பான் யுத்தத்தில் ஈடுபடமாட்டாதெனவும், யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் படைகள் நிறுத்தப்படாமல் தனித்துவம் காக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை ஜப்பானின் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் புதிய தலைவர் கற்சுயா ஒத்கடா ஈராக்கிலிருந்து ஜப்பான் படைகள் மீளப்பெறப்பட வேண்டுமெனத் தெரிவித்திருக்கிறார்.


# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உலக அளவிலான மீன்பிடியில் 95 வீதமானவை - ஏறத்தாழ 80 மில்லியன் தொன்கள் மீன்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே பிடிக்கப்படுகின்றது.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலை விளையாட்டு வீரர்கள் வன்னி செல்ல படையினர் தடை!

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் குழு நேற்றுக்காலை வன்னிப் பெருநிலப்பரப்புக்கு மேற்கொண்ட பயணம் இராணுவத்தால் தடைசெய்யப்பட்டது.

மூதூர் கிழக்கு, சம்பூர், கிளிவெட்டி, ஈச்சிலம்பற்றுப் பகுதிகளைச் சேர்ந்த பல்வேறு விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு வீரர்கள் 75 பேர் சிநேகபூர்வ விளையாட்டுப்போட்டியில் கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை 10.30 மணியளவில் வன்னிக்கான தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

மூதூர் கட்டை பறிச்சான் இராணுவ முகாமூடாக பயணம் செய்ய முனைந்த விளையாட்டு வீரர்கள் கொண்ட பேரூந்தை வழிமறித்த இராணுவத்தினர் அனைவரினதும் தேசிய அடையாள அட்டைகளைக் காட்டுமாறு கேட்டனர்.

பேரூந்தில் விளையாட்டு வீரர்களுடன் இணைந்து அவர்களுக்கு உதவியாக பயணம் செய்த விடுதலைப் புலிகளின் மூன்று போராளிகள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்தபோது அவர்கள் மூவரையும் தொடர்ந்தும் வன்னிக்குப் பயணம் செய்ய அனுமதித்த படையினர், விளையாட்டு வீரர்கள் 75 பேரில் அனேகரிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு அவர்களைத் தொடர்ந்தும் பயணம் செய்ய அனுமதி மறுத்ததுடன் அவர்களை மீண்டும் கட்டுப்பாடற்ற பகுதிக்கு திரும்பிச் செல்லுமாறு கூறித் திருப்பியனுப்பியுள்ளனர்.

பேரூந்தில் இருந்த மூன்று விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளும் திருமலை மாவட்டப் படையினருக்கு விளக்கி இவ்விளையாட்டு வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுவிட்டு ஒரு சில தினங்களில் மீளவும் மூதூர் திரும்புவர் என்பதை எடுத்துக் கூறிய போதும், படையினர் பயணத்தை தொடர அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் போராளிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் குழு பயணததை கைவிட்டு மூதூர் திரும்பியதாக அறியமுடிகிறது. (01)

# கொழும்பு சென்ற ரயிலில் ஆயுதத்துடன் முஸ்லிம்கள் கைது

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற இரவு தபால் ரயிலில் ஆயுதங்களுடன் சென்ற நான்கு முஸ்லிம்கள் கல்லோயாவிலுள்ள ரயில் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

கடந்த புதன்கிழமை மாலை ஆறு மணியளவில் மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட இரவு தபால் ரயிலில் மேற்படி நான்கு முஸ்லிம் இளைஞர்களும் தமது பயணத்தை மேற்கொண்டனர்.

குறித்த ரயில் கல்லோயா ரயில் நிலையத்தை அடைந்தவேளை, அங்கு கடமையிலிருந்த படையினா ஆயுதத்துடன் தங்கியிருந்த இந்த நான்கு முஸ்லிம்களையும் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து ரி 56 துப்பாக்கி ஒன்று அதற்குரிய ரவைகள் மற்றும் ஐந்து கைக்குண்டுகள் என்பன கைப்பற்றப்பட்டன.

ரயில்வே பாதுகாப்பு படையின் கல்லோயா பொறுப்பதிகாரி டபிள்யூ.ஜி .சபசேன உட்பட்ட குழுவினால் கைதுசெய்யப்பட்ட இந்த நான்கு முஸ்லிம்களும் அவர்களிடமிருந்து கைபபற்றப்பட்ட ஆயுதங்களுடன் ஹபரண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# ஐ.நாவுக்கான பிரதிநிதியாக நிருபம் சென் நியமனம்!

(புதுடெல்கி)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென், ஐக்கிய நாடுகள் சபைக்கான வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், வெளியுறவுத் துறை அமைச்சில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராகவுள்ள நிருபம் சென், ஐ.நாவுக்கான வதிவிடப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருப்பதுடன், இவர் விரைவில் அந்தப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார்.

இதேவேளை, இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நிருபாமா ராவ் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் கொழும்பு வந்து தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வார்.

இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கும் நிருபாமா ராவ், இந்திய அரசாங்கப் பேச்சாளராகவும் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 15 இல்

5 ஆண்டுப் புலமைப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# கண்ணிவெடி அகற்றுவதற்கு ஜப்பானிய அரசு நிதியுதவி

## ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானது

வடக்கு - கிழக்குப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் திட்டத்துக்கு ஜப்பானிய அரசு 25 இலட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசுக்கு உதவியாக வழங்கியுள்ளது.

இதற்கான உடன்படிக்கை ஒன்று நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சில் நேற்று பிற்பகல் கைச்சாத்திடப்பட்டது.

ஜப்பானிய அமைச்சின் சார்பில் இலங்கைக்கான தூதுவர் அக்கியோ சுடாவும் இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் குழு, ஹலோட்ரஸ்ட், கண்ணிவெடிகள் ஆலோசனைக் குழு நோர்வே மக்கள் உதவி அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

## பண்ணைக்...

இந்தப் படுகொலைக்கான காரணங்கள் குறித்து மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

## நாட்டின்...

எச்சரிக்கை குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கொழும்பு நகரத்தின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வழக்கமாக ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடும் பாதுகாப்புச்சபைக் கூட்டம் அவர் லண்டன் சென்றிருப்பதால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் கூடியது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில்...

திப்பில் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே ஜனாதிபதி சந்திரிகாவையும், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் லண்டனில் சந்தித்துப்பேச, விதார் ஹெல்கிசன் முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தியா வரவுள்ள விதார் ஹெல்கிசன் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட முக்கிய தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# திருக்கேதீஸ்வரத்திலிருந்து திரும்பிய பயணிகளிடம் கொள்ளை

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு சென்றுவிட்டு கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் பயணம் செய்த திருடர்கள் சாரதியை மிரட்டி காட்டுப்பகுதிக்குக் கொண்டுசென்று பயணிகளிடம் இருந்து பணம், நகைகளைக் கொள்ளையடித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று தங்காலை வெலிக்கட பிரதேசத்தில் இடம்பெற்றது.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

தங்காலைப் பகுதியில் பஸ் சென்று கொண்டிருந்த சமயம் அதில் பயணம் செய்த ஐந்து கொள்ளையர்கள் பஸ் நடத்துனரை மிரட்டிப் பணம், நகைகளை கொள்ளை அடித்தனர். இதனையடுத்து பஸ்ஸில் சிவில் உடையுடன் இருந்த பொலிஸார் ஒருவர் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் கொள்ளையரில் ஒருவர் காயமடைந்தார். மற்றைய நான்கு பேரும் தப்பிச் சென்றுவிட்டனர்.

## அதிரடிப்...

வுள்ளனர். இந்தச் சந்திப்பில் திருக்கோவில் வைத்தியசாலையில் உள்ள விசேட அதிரடிப் படையினரின் முகாம் மற்றும் மக்கள் வாழ்விடங்களில் உள்ள முகாம்களை அகற்றுவது குறித்து கலந்துரையாடப்படுமெனத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட அசாதாரண சூழலையடுத்து அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படையினருக்கும், புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (07)

# இராணுவத் தளபதி...

கான கட்டளைத் தளபதியாகவும் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை புதிய இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்திருந்தார்.

ஆனால், இந்த முடிவுக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஜே.வி.பி என்பன எதிர்ப்புத் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பானவர் என்றும், இவரை இராணுவத் தளபதிகாக நியமிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென்று அரசியல் ரீதியான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்தே லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு மேலும் ஆறு மாத கால சேவை நீடிப்பை அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசியக் கடற்பகுதியின்...

வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அத்துடன் தனியாக நின்று பயங்கரவாதத்தை எதிர்க்கமுடியாது எனவும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜப்பானின் பிரதி போககுவரத்து அமைச்சரான ரைசோ சடோ தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் 361 துறைமுகங்கள் ஊடாக கொள்கலன் சேவையை அமெரிக்கா நடத்தி வருகிறது.

இவ்வாறு கொள்கலன் சேவையை நடாத்தும்வேளையில் அல்கொய்டா போன்ற தீவிரவாத அமைப்புக்கள் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சத்தை அமெரிக்கா எதிர்நோக்கியுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் ஏற்பாட்டிலேயே இந்த மாநாடு நேற்றும், நேற்று முன்தினமும் என இரண்டு நாட்களாக நடைபெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே அமெரிக்கா துறைமுகப் பாதுகாப்பு விடயத்தில் சகல நாடுகளுடனும் தொடர்புகளை வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01)

# மாகாணசபைத் தேர்தல்...

டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டின் அரசாங்கத்தைத் தீர்மானிக்க நடத்தப்படுவதே பொதுத் தேர்தலாகும். ஆனால், மாகாணசபைத் தேர்தல் என்பது எவ்வித பிரயோசனமும் அற்றதாகும்.

வடக்கு, கிழக்கிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக 1987 இல் கொண்டுவரப்பட்டதே மாகாணசபை. அங்கு மாகாணசபை இயங்காத நிலையில், ஏனைய இடங்களில் இதனை அமுல்படுத்துவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

இவ்வாறான பிரயோசனமில்லாத மாகாண சபைக்கு தேர்தல் ஒன்று நடத்தப்படுவது அதைவிட பிரயோசனமில்லாத செயலாகும். ஆனாலும். இலங்கையின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு இதனைச் செய்ய வேண்டியுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் 13 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தேர்தல் திணைக்களத்துக்கு மட்டுமே செலவாகியுள்ளது. இதனைப் போன்ற செலவே நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கும் ஏற்படவுள்ளது.

தேர்தல் பணிகளுக்காக அரசாங்கம் வழங்கும் நிதி போதாமலுள்ளது. இவ்வாறான நிலையிலும், தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் தெரிவித்தார். (01)

பவர்செல்லுலர்ட்ரேடிங் கம்பனியின் கிளை நிறுவனம் 19.06.2004 பிற்பகல் 2 மணி முதல் இலக்கம் 205/1 ராஜா தியேட்டர் முன்பாக கோலகலமான திறப்பு விழா


24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் கட்டணம் - 25/=

மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம் முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.



அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Hand Phone Unlock செய்து தரப்படும்

Hand Phone பழுது பார்க்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:

பவர்செல்லுலர்ட்ரேடிங் கம்பனி

இல. 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ராஜா தியேட்டர் முன்பாக)

(சி/2668)

T.P: 021 222 7070, 0712 399220, 0777 281521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.